# நயனவிதி

## நயனரோகவிபரம்

வாதகாசம் பித்தகாசம் சிலெத்மகாசம் நீலகாசம் நீரொளிகாசம் குமரிகாசம் மந்தாரகாசம் இரத்தகாசம் செலகும்பம் பில்லம் படலம் வெண்மாசுப்படலம் மாலைக்கண் விழிவிழுங்கி மணிவளர்த்தி மதிமந்தம் பருவணிகை சுற்றுக்கண் சுருங்குகண் உளைவு காசவெரி அன்னகோபம் அனல்கோபம் புகைச்சல் பற்பரோகம் ஒட்டுக்கண் கண்மலங்கல் கண்பிரிவு நீர்ப்பாச்சல் செவ்வேர் குந்தம் சுக்கிரன் அமரம் அக்கரம் கட்கட்டி இருட்கண் செவ்வரிப்படலம் கூச்சம் பூ ஆணிப்பூ புழுவெட்டு நேத்திரவாயு வெள்ளெழுத்து கண்வலி அழற்றிவிழிகண்குருடு செஞ்சுடர் எழுச்சி புளித்தகண் இளிகண் அழிகண் முடமயிர் கண்ணிறைச்சி முதலானகண்ரோகம் -௯௬-

### அவைகள்தோன்றுமிடம்

வாதகோபத்தால் கருவிழியினிடத்து-௪௫-ம் சிலேத்மகோபத்தால் வெள்ளைவிழியினிடத்து- ௨௰-ம் பித்தகோபத்தால் இமையோரத்தில் -௰௯- ம் கடைக்கண்ணில் ௰௫ ம் பிறக்கிறது

### அவைவருதற்குக்காரணம்

மாதர் மயக்கத்தாலும் மூலத்திலக்கினி யதிகரிப்பதாலும் மேகநீராலும் மலக்கட்டினாலும் தலைவரகூஷியினாலும் எண்ணெய் முழுக்குத்தவறுலும் அதிகவிசனத்தாலும் கடுவெயிலில் ஓயாது நடக்கிறதாலும் அதிகசுமையெடுக்கிறதாலும் மழையிலுங்காற்றிலும் அவதிப்படுவதினாலும் தாம்பூலம் அடக்கி நித்திரை செய்வதாலும் ஆழ்ந்தபார்வையினாலுஞ் ஷெ ரோகங்கள் சம்பவிக்கும்.

### வாதகாசத்தின்குணம்

விழிவீங்கிக் கடுத்துத்தணற்போலெரிந்து நீர்வடியும் நித்திரைசற்றும்வராது

ஒருபடி ஆவினெயில் நற்சீரகமொருசிரங்கை அரிந்தகருள்

ளிபடி -வ- நத்தைச்சதை நூலெலுமிச்சங்காய்ப்பிரமாணம் இவைகளைச்சிதைத்துப் போட்டுக்காய்ச்சி வடித்துக்கொண்டு சிறுபூளைச்சாற்றை முந்திக்கண்ணிற்பிழிந்து அப்பால் ஷெ நெய்யைக் கட்டியாவது அல்லது முள்ளி ஆவரை அல்லி நீலி முருங்கை இவைகளின்பூவை ஓரளவாய் ஆவின்பால்விட்டரைத்து அப்பால் ஷெ நெய்யும் தேனுங்கூட்டிக்களிம்புசெய்து கண்ணில்தீட்டியாவது நல்லெண்ணெய் படி -உ- நெருஞ்சிச்சாறுமுலைப்பால் ஆவின்பால் வகைக்குப்படி அரை வீதம் இவைகளையோர்நிரையாய்க்கலந்ததிற் கல்நார் சிற்றாமுட்டிவேர் கொன்றைப்பிசின் அதிமதூரம் லாமிச்சவேர் வெட்டிவேர் கொத்தமல்லி சிறுகீரைவேர் செஞ்சந்தனம் கோஷ்டம் ஏலம் வகைக்குப்பலம் -க- இடித்து எட்டுப்படிதண்ணீரிற் போட்டு -உ- படியாய் வற்றவைத்திறுத்துக்கூட விட்டுச் சடாமாஞ்சி சாத்திரவேதி வகைக்குப்பலம்-க- ஆவினெயிலரைத்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்

பித்தகாசத்தின்குணம்

வெள்ளைவிழியில் வெண்மேகம்போல் நீர்படர்ந்து கருவிழியிற் பாதிஉழுந்துப்பிரமாணம் வெண்மையாய்த் தோன்றும்

நிவர்த்தி

சங்கு திரிகடுகு அரிதாரம் அதிமதூரம் புங்கவித்து பிதரோகணி துத்தம் மனோசிலை இவைகளைஓர்நிரையாய் நந்தியாவட்டப்பூச் சாற்றிலரைத்துக்கயிறுசெய்து தேனிலுரைத்துக் கண்ணிற்போட்டு சிற்றாமுட்டி மொசிமுசுக்கை குரும்பை சீந்திக்கொடி உத்தமதாளி தாமரைவளையம் வகைக்குப்பத்துப்பலமிடித்துப்பத்துப்படி தண்ணீரிற்போட்டு இரண்டுபடியாய் வற்றவைத்திறுத்து அதில் அதிமதூரம் சண்பகப்பூ செவியம் கோஷ்டம் மஞ்சிட்டி ஏலம் லவங்கம் வகைக்குமூன்றுவிராகனிடை ஆவின்பாலிலரைத்துப்போட்டு ஒருபடிநல்லெண்ணெய் விட்டுப்பதமாய்க்காய்ச்சிவடித்துமுழுகியும்வரத்தீரும்.

குமரிகாசத்தின்குணம்

கன் வீங்கிக்கடுப்பும் வலியுங்காணும் பீளைகட்டும்

நிவர்த்தி

திருசு துத்தம் புங்கவித்து இந்துப்பு சங்கு மிளகு மஞ்சள் இவைகளேயோர்நிறையாய் ஆவின்பால்விட்டரைத்தாலேநெய்யிற் போட்டுக்காச்சிவடித்துக்கொண்டு கண்ணில் வார்க்கும் ஆவினெய் எருள்ளிச்சாறு வகைக்குப்படி -க-ஒன்றாய்க்கலந்ததிற் செங்கழுநீர்க்கிழங்கு சிந்தித்தண்டு எலம் மல்லி லாமிச்சு வெட்டிவேர் சண்பகப்பூ நெல்லிமுள்ளி வகைக்குப்பலம் -வ- ஆவின்பாலிலரைத்துப் போட்டுப்பதமாய்க்காய்ச்சிவடித்து முழுகியும் வரத்திரும்

நீலகாசத்தின்குணம்

கண்சோதிலையயடுத்துச்சற்று சுணங்கும்போல் வெளுரிக்காணும் பாசிபோல் நீர்படர்ந்து ஒளிமங்கும்

நிவர்த்தி

வெண்காரம் துத்தம் திருசு சாரடைவேர் பவளம் மீங்கரனேடு பச்சைக்கர்ப்பூரம் சாத்திரவேதி யிவைகளேயோர் நிறையாய் மாதுளம்பூச்சாற்றிலரைத்துக் கயிறுசெய்துகண்ணிற்போட்டு பாதரி மொசுமுசிக்கை பரித்தி செங்குன்றி முடக்கொத்தான் வகைக்குச்சாறுபடி-வ-நல்லெண்ணெய்படி-க- ஒன்றாய்க்கலந்ததில்தகரம் சடாமாஞ்சி ஏலம் மல்லி தான்றி கோஷ்டம் வகைக்குப் பலங்கால்வீதமரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்துமுழுகிவரத்திரும்

நீரொளிகாசத்தின்குணம்

கண்ணிற்சலங்கோர்த்துத்திரண்டு கருவிழியினடியில் பூப்போற்தோன்றியது தீப்பொறிபோல் ஒளிவிடும்.

நிவர்த்தி

குங்குமப்பூவும் பச்சைக்கர்ப்பூரமும் சமமாய் எலுமிச்சம்பழச்சாற்றிலும் தெளிவுங்குழம்பு போலரைத்துக் கொண்டு கண்ணிற்போட்டும் ஆனைத்திப்பிலி அதிமதுரம் தக்கோலம் வெள்ளிலோத்திரம் சுக்கு திரிபலை வகைக்குப்பலம்-க-வீதம் ஆவின்பாலிலரைத்தொருபடி நெய்யிற்போட்டுக்காய்ச்சிவடித்துமுழுகியும் வரத்திரும்-

நீர்ப்பாச்சலின்குணம்

விழிநொந்துசிவந்து அனற்போலெரியும்அருவிபோல்நீர்வடியும்தினவெடுக்கும்-

நிவர்த்தி

குதிரைப்பல்லு கருசு துத்தம் குமரிவேர் சங்கு இவைகளை ஓர்நிறையாய் தேனும் முலைப்பாலும் விட்டுக்குழம்புபோலரைத்துக்கொண்டு கண்ணில்திட்டியும் கையாந்தகரை கருவாழைக்கிழங்கு கம்மந்திராய் உத்தமதாளி தைவேளை மணித்தக்காளி நந்தியாவட்டம் இவைகளின்சாறு வகைக்குப்படி-வ-நல்லெண்ணெய்ப்படி-க-ஆவினெய்படி-இ-இவைகளை ஒன்றாய்க்கலந்ததில் வெட்டிவேர் லாமிச்சம்வேர் வகைக்குப்பலம்-க-அதிமதுரம் கோஷ்டம் சந்தணம் மஞ்சிட்டி குரும்பை சதகுப்பை கண்டில் சடாமாஞ்சில் கச்சோலம் வசவாசி இந்துப்பு தான்றிக்காய் வகைக்குக்கழஞ்சு-உ-விதம்அரைத்துப்போட்டுக்காய்ச்சி வடித்து முழுகியும்வரத்தீரும்-

அன்னகோபமென்ற அனல்கோபத்தின்குணம்

நயனநொந்துசிவந்துவலித்துப்புடைத்துத்தீப்போலெரிந்துநீர்வடியும்-

நிவர்த்தி

மாதுளம் பூவும் காயும் பச்சைக்கர்ப்பூரமும் ஓர்நிறையாய்க்கல்வத்திட்டு முலைப்பால்விட்டுச் சிதைத்துத்துணியில்முடிந்து கண்ணிற்பிழிந்து இதனடியில்வருகிறதயிலந்தளிகொன்றை முழுகிவரத்தீரும். முலைப்பால் நல்லெண்ணெய் வகைக்குப்படி-க-விதங்கலந்ததிற்கோஷ்டம் சண்பகப்பூ ஏலம் மதுரம் முத்தக்காசு லாமிச்சம்வேர் வெட்டிவேர் சந்தணம் வகைக்குப்பலம்- வ-விதம்பொடியாயரைத்துப்போட்டுக்காய்ச்சிமுழுகிவரத்தீரும்-

கற்றாழஞ்சாறு நெல்லிக்காய்ச்சாறு நல்லெண்ணெய்வகைக்குப்படி-க-ஒன்றாய்க்கலந்துகாய்ச்சிக்குறுகிவருகையில்பச்சைக்கர்ப்பூரம் புனுகுசட்டம் சந்தணம் சாதிக்காய் வகைக்கொருகழஞ்சுவிதம்பொடித்துப் போட்டுவடித்துமுழுகிவரத்தீரும்

பிரிதற்கண்ணின்குணம்

கருவிளையல் காந்தம் செவியம்வெள்ளைக்காக்கணம்வேர் துத்தம்

துருசு வெண்கலம் இவையெல்லாம் ஓர்நிறையாய் எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்துக்கயிறுசெய்து ஆவினெய்யாலும் முலைப்பாலாலும்அரைத்துக்கண்ணிற்போட்டுவரத்தீரும்- துத்தம் துருசு கம்பிளிசுட்டசாம்பல் தலைமயிர்சுட்டசாம்பல் வகைக்குவிராகனிடை-க-விதங்கல்வத்திட்டு கழற்கொடிச்சாற்றில் -ரு- சாமம் அரைத்துலர்த்தியபின்பு ஆவின்வெண்ணெயைக்கூட்டிக்களிம்புபோலரைத் துக்கண்ணில்தீட்டிவரத்தீரும்-

ஆவின்பாலும் நல்லெண்ணெயும் வகைக்கொருபடிவீதங்கலந்ததில் திரிகடுகு காந்தம் தென்னவேர் அதிமதுரம் மட்டிப்பால் கோஷ்டம் சந்தணம் ஏலம் குதிரவாலிவேர் கல்மதம் சண்பகப்பூ தகரம் சடாமாஞ்சி வகைக்குக்கழஞ்சு-ரு- இவைகளைஇளநீரிலரைத்துப் போட்டுக்காய்ச்சி வடித்துக்கொண்டு ஷடினையோகங்களிலொன்றைக் கண்ணிற்போட்டும் இந்தஎண்ணெயை முழுகிவரத்தீரும்-

காசவெறிக்குணம்

எழுத்தைப்பார்த்துப்பின்மனிதரைப்பார்த்தாலிருட்போற்றோன்றும்

நிவர்த்தி

வாலுளுவையரிசி குங்குமப்பூ கிராம்பு பச்சைக்கர்ப்பூரம் சந்தனம் சண்பகப்பூ பீதரோகணி லவங்கப்பத்திரி வெள்ளைச்சாரணைவேர் வகைக்குக்கழஞ்சு-க- வெள்ளிப்பொடிகழஞ்சு -வ- இவைகளைத்தேனில் நாலுசாமமரைட்டிக்கண்ணிற்போட்டு நல்லெண்ணெய் ஆவின்பால்ஷ்தயிர்த்தண்ணீர்வகைக்குப்படி -ரு- இவைகளைக்கலந்ததிற்சந்தனம் தேவதாரம்பேரீத்தம்பழம் முந்திரிப்பழம் காட்டெருமைப்பால் தாமரைப்பூ ஏலம் லவங்கப்பத்திரி மல்லி நெல்லிமுள்ளி வகைக்குப்பலம்-அ- இவைகளைஷ்பாலிலரைட்டிப்போட்டுக்காய்ச்சிவடித்துத்தலைமுழுகிவர காசவெறி கண்மயக்கம்பித்தநீர் தலையிடிநீங்கும்

புகைச்சலின்குணம்

கண்மங்கலாயும் உருவம் அநேகமாயுந்தோன்றும்.

நிவர்த்தி

தலையோடு கழஞ்சு -ரு- துத்தம் கழஞ்சு -உ-இந்துப்பு கழ

ஞ்சு -க- இவைகளை பனைமட்டைச்சாற்றிலரைத்துக் கயிறுசெய்து ஷைசாற்றிலுரைத்துக் கண்ணிலிடத்தீரும் எலுமிச்சம்பழச்சாறு ஒருதுளி நல்லெண்ணெய் ஒருதுளி இலுப்பையரப்பு ஊறின தண்ணீர் ஒருதுளி யிவைகளையொன்றாய்க்கலந்து கையில்மத்தித்துக் கண்ணிற்போட்டுவரத்தீரும் கடுக்காய்ப்பருப்பு -ഥഉ- திப்பிலி -ரு- மிளகு -ரு- இவைகளை நெல்லிப்பழச்சாற்றிலரைத்துக் கயிறுசெய்து ஷைசாற்றிலாவது ஷைவற்றலூறினதண்ணீரிலாவதுரைத்துக் கண்ணிற்போட்டுவரத்திரும் பலகறைவிராகனிடை -ரு- துத்தம் துருசு வகைக்குவிராகனிடை வ இவைகளையெலுமிச்சம்பழச்சாற்றிலரைத்து க்கயிறுசெய்து முலைப்பாலிலுரைத்துக் கண்ணிற்போட்டுவரத்தீரும் கடம்பவிலையை ஆவின்பாலிலரைத்துலர்த்திக்கொண்டு முலைப்பாலிலுரைத்துக் கண்ணிற்போட்டுவரத்தீரும் வெள்ளைச்சாரணைவேர் மிளகு சிறுதிப்பிலி யிவைகளைச்சரிநிரையாய் உத்தமதாளிச்சாற்றிலும் குரிஞ்சாச்சாற்றிலும் நந்தியாவட்டப்பூச்சாற்றிலும் அரைத்துக் கயிறுசெய்து நீரிலுரைத்துக் கண்ணிற்போடத்தீரும்

நல்லெண்ணெய் படி -வ- முலைப்பால் படி -வ- ஒன்றாய்க்கலந்ததில் அதிமதுரம் நற்சீரகம் வகைக்குவிராகனிடை -க- மிளகுவிராகனிடை -இ- கற்றாழஞ்சோறு ஒருபாக்களவரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்துஒன்றைவிட்டொருநாள் தலைக்கிட்டுஉசிலம்பொடியாவது பாசிப்பயறுவது அரைப்பிட்டுத்தேய்த்துச்சுடுதண்ணீரில்ஸ்நானஞ்செய் துவரத்தீரும்.

நல்லெண்ணெய்ப்படி -இ- மிளகுஅதிமதுரம் வகைக்குப்பலம் க- இவைகளையாவின்பாலிலரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்தும முழுகிவரத்தீரும்.

## மதிமந்தக்குணம்

கண்சிவந்து உறுத்திவலிக்கும்பீளைசாடும்நீர்வடியும்பார்வை மந்தமாயிருக்கும்.

## நீவர்த்தி

கடல் நுரையும் கற்கண்டுமோர்நிரையாய்த்தேனிலரைத்துக்கண்ணிலிடத்திரும். இதில்மாறாவிடில் இந்துப்பு மரமஞ்சள் மனோசிலை திரிகடுகு இவைகளைசமமாய்ப்பசுவின்பாலிலரைத்துக்

கயிறுசெய்து ஷெ நீரிலுரைத்துக்கண்ணிலெழுதிவரத்தீரும். இதி லுதீங்காவிட்டால்இந்துப்பு சதகுப்பை சங்கு மனோசிலை கடலுரை மிளகு செங்கற்பொடி ஓரளவாயெலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துக்கயிறுசெய்து ஆவினெய்யிலுரைத்துப்போட்டு வரத்திரும். இதிலுதீங்காவிட்டால் நெற்றியிற்படர்ந்திருக்கும் நரம்பிலொன்றை ஊசியினுற்குத்தி இந்துப்பு திப்பிலி பீதரோகணியிவைகளையோர்நிரையாய் நந்தியாவட்டப்பூச்சாற்றிலரைத்துக்கயிறுசெய்துகொண்டுஷெ சாற்றிலுரைத்துக்கண்ணிற்றீட்டிவரத்திரும் ஷெ பிரையோகங்களைச்செய்யும்போது இதனடியிற்சொல்லியிருக்கிறமருந்தைத் தலையிற்றேய்த்துஅன்றுடகம் ஸ்நானஞ்செய்துவந்தாற்பகலில் அருந்ததிதோன்றும்

கண்மந்தம் பித்தம் தீர்ப்பாச்சலுக்குத்தளம்

சந்தனம் அதிமதூரம் வகைக்குப்பலம்-௧-குமரிச்சோறு ஒருபிடி இவைகளை ஆவின்பாலவிட்டரைத்துக் கொதிக்கவைத்துத்தலையிற்றளமிட்டு அழுந்தத்தேய்த்து ஸ்நானஞ்செய்துவரத்தீரும்

பற்பரோகத்தின்குணம்

கண்ணிமையினுள் இரத்தங்கட்டித்திரண்டு இளம[illegible]மிசம் போலிருக்கும்.

நிவர்த்தி

கண்ணிமையைப்பிதிக்கிக்கொண்டு அதிற்சீரகப்பொடியைத்தூவிப்பேய்ப்பீர்க்கிலையாற்றேய்த்துஇரத்தம்போக்கி புளியிலையயிடித்துச் சாறுபிழிந்து குழம்பாய்க்காய்ச்சி மூன்றுநாட்கண்ணிற்புறவளையமிட்டு துத்தம் துருசு இந்துப்பு இவைகளையோர்நிரையாய் உப்பிலிச்சாற்றில் மைப்போலரைத்துலர்த்தி அப்பால் நெய்யுந்தேனும்விட்டு களிம்புபோலரைத்துக்கொண்டுகண்ணிற்போட்டுவரத்திரும்.

செலகும்பத்தின்குணம்

வெள்ளைவிழியில் நீர்கோர்த்து இமைவீங்கிக்கடுத்துவலிக்கும்பீளைகட்டும்.

நிவர்த்தி

வெண்குன்றிப்பருப்பும் அதின்வேரும் வெள்ளைக்காக்கண

ம்பூவும் அதின்விரையும் மூலைப்பால் வார்த்தரைத்துருட்டிக்கயி
ழுசெய்து தேனிலுரைத்துக்கண்ணிற்போட்டுஆடுதீண்டாப்பாளை
ஆவரை மணித்தக்காளி வரிக்கற்றாழை இவைகளின்சாறு நல்லெ
ண்ணெய் ஆவின்பால் வகைக்குப்படி-க-கோஷ்டம் மட்டிப்பால்
மதுரம் லாமிச்சம்வேர் வெட்டிவேர் ஏலம் வகைக்குக்காற் பலவி
தமரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்து முழுகியும்வரத்திரும்.

பில்லத்தின்குணம்

கண்ணிமை புருவம் முழுமையும் நீர்கட்டித்திரண்டு புடை
த்து விம்மியிருக்கும்

நிவர்த்தி

கண்ணிமையை உறுத்திப்பிடித்து ஊசியாற்குத்தி
யுரித்துப் போட்டு ஆவின்பால் நெய் நல்லெண்ணெய் இம்மூ
ன்றுமொன்றாய்க்கலந்து கரண்டியிற்காய்ச்சியதில்எள்ளைப்பொ
டித்துச்சீலையில் முடிந்து தோய்த்து நெற்றி புருவம் கன்னம் இ
வைகளில் ஒத்தணஞ்செய்து பச்சைக்கர்ப்பூரத்தை நெய்யிற்
பொடித்துப்போட்டு சற்றுகொதிக்கவைத்து அதில் துணியை ந
னைத்து இமையின்பேரிற்போட்டு பெருங்காயமுஞ் சீரகமும்
பொடித்துத்தணலிற்றூவிப் புகைகட்டிவரத்திரும்

செவ்வேர்க்குணம்

கடைக்கண்ணிலிருந்துவெள்ளைவிழி எங்குஞ்செகப்பு நூ
ற்போற்செவ்வரியோடிப்படர்ந்திருக்கும்

நிவர்த்தி

ஷ்டிமாசைஊசியால் திரட்டியுரித்துப்போட்டு வெட்பூலா
வேளைமூலைப்பால் விட்டுத்தட்டிக்கண்ணிற்பிழியத்திரும்.

பருவணிகைக்குணம்

கடைக்கண்ணிற்சதைவளர்ந்துபடர்ந்து உருத்திவலிக்கும்.

நிவர்த்தி

ஊசியினாற்சதையைத்திரட்டியுரித்துப்போட்டு அதிமதுர
த்தைத்தட்டி ஆவினெய்யிற்போட்டுச்சிவக்கக்காய்ச்சிக்கண்ணி
ற்கட்டிவந்தாலுந்திரும்அல்லது வெங்கலப்பொடிதலையோடுவெ
ள்ளைக்கற்பொடி அத்தம் இந்துப்பு இவைகளை யோர்நிரையாய்ப்
பழச்சாற்றிலரைத்துலர்த்திப்பின்பு வெண்ணெய்கூட்டிக்குழிப்பு

போலரைத்துக்கண்ணிற்றீட்டிவந்தாலும் பருவணிகை சதைவளர்த்திகிரும்.

படலத்தின்குணம்

வெள்ளைவிழியிற்பாலாடைபோல்மாசுபடர்ந்திருக்கும்.

நிவர்த்தி

ஷிமாசைஉளசியினாற்றிரட்டியுரித்துப்போட்டுஷிஅதிமதுரநெய்யைக் கண்ணில்வார்க்கத்தீரும் அல்லது திரிகடுகு துத்தம்செஞ்சந்தனம் வெள்ளைச்சாரணைவேர் தாமரைக்கிழங்கு பச்சைசர்க்கர்ப்பூரம் இவைகளையோர்நிறையாய்முலைப்பால் விட்டரைத்துக்கயிறுசெய்துஷிபாலிலுரைத்துக்கண்ணிற்றீட்டி வந்தாலும் அல்லது அஞ்சனக்கல் முட்டைத்தோல் சங்கு திப்பிலி சந்தனம் தலையோடு இவைகளையோர் நிறையாய்ப்பழச்சாற்றிலரைத்துக் கண்ணிற்றீட்டிவந்தாலுஞ் சகலபடலமும் நீங்கும்

வெண்மாசுப்படலத்தின்குணம்

விழியில்வெண்மாசுபடர்ந்துகாகரத்துக்குத்தெடுக்கும்

நிவர்த்தி

பீதரோகணி துத்தம் துருசு பச்சைக்கர்ப்பூரம் திரிகடுகு நெல்லிப்பருப்பு செம்புப்பொடி பளிங்கிக்கல் இரும்புப்பொடி தலையோடு கடுக்காய் சிறுகீரைவேர் பொன்னாங் காணிவேர் வெட்பூலாவேர் ஓரிலைத்தாமரைவேர் வகைககுவிராகனிடை-க- இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றிலும் காணிச்சாற்றிலும் அரைத்துக்கயிறுசெய்து முலைப்பாலிலுரைத்துக்கண்ணில் தீட்டிவந்தாலும் அல்லது சுக்கு திப்பிலி மிளகு சங்கு அரிதாரம் புங்கம்பருப்பு அதிமதுரம் துத்தம் பீதரோகணி மனேசிலை பன்றிக்கொம்பு ஆமையோடு புலிநகம் வெள்ளி சேவல்நெஞ்செலும்பு இந்துப்பு இவைகளை ஓர்நிறையாய் நந்தியாவட்டப்பூச் சாற்றில் மூன்றுநாளரைத்துக்கயிறுசெய்துகொண்டுதேனிலாவது முலைப்பாலிலாவது உரைத்துக்கண்ணிலிட படலம் வெண்மாசுப்படலம் ஆணிப்பூவும் நீங்கும்-

மாலைக்கண்ணின்குணம்

மாலைநேரத்திலிருட்பிடித்ததுபோற்காணும்

நிவர்த்தி

புளியம்பூ கிராம்பு வெள்ளைக்காக்கணம்வேர் அலின்பூ துத்

தம் துருசு நீலரத்தினம் மூந்து பவளம் சமமாயெடுமிச்சம்பழ
ச்சாற்றிலரைத்துக்கயிறுசெய்துகொண்டு ஷை சாற்றிலுரைத்துக்க
ண்ணிற்றீட்டமாறும்

வேப்பிலையைமைப்போலரைத்துக்கோழிப்பித்திற்குக்கவசஞ்
செய்துஉமிக்காந்தலிற்சுட்டுக்கவசம நீக்கியுள்ளுக்குக்கொடுத்தாலு
ம். அல்லது ஷை பித்தை முன்போல் வெதுப்பிப்பொடித்து மூன்
றுநாட்கண்ணுற்றாவிறுலும் மின்னிட்டான்பூச்சியையும் வெற்றி
லையுங்கசக்கிக்கண்ணிற்பிழிந்தாலும் மருதம்பட்டை நற்சீரகம் ஈ
ருள்ளியிவைகளைச்சிதைத்துப்பிழிந்தாலும் இலுப்பைப்பூவையாவ
துமகிழவித்தையாவது அல்லது காட்ட ாமணக்கின் முத்தையாவ
து அனிஞ்சிவிரையையாவது முலைப்பாலிலுரைத்துப்போடத்திரு
ம். பொன்னுவரைவேரை வெள்ளாட்டுப்பாலிலுரைத்துப்போட்
டாலும் வெள்ளைச்சாரணைவேரைக்கரடியிலுரைத்துப்போட்டா
லும் மின்மினிப்பூச்சி துருசு வெள்ளைச்சாரடைவேர் ஓர்நிறையா
ய்ச் சதாப்பிலைச் சாறுவிட்டரைத்துக்கயிறுசெய்து முலைப்பாலி
லுரைத்துப்போட்டாலுந்தீரும்-

விழிவிழுங்கிக்குணம்

ஒருநேரங்காலைமுதல்மதியம்வரை தலைமிகுதியாய் அதிர்த்
துக்கடைந்து இடிக்கும்ஒருநேரம்உச்சி மயிரைப் பிடுங்குதுவ
போலிருக்கும் அப்பால் நாட்செல்லச்செல்லக் கண்ணிற்சதைவ
ளர்ந்துமூடும்.

நிவர்த்தி

ஷை குணங்கண்டவுடன் மிளகுவிராகனிடை -க- உப்புக்கல்
ஒன்று தவசிமுருங்கையிலை ஒருகொட்டைப்பாக்குப்பிரமாணம்
இவைகளைச்சிதைத்துத்துணியில்முடிந்து முலைப்பாலிலூறவைத்
துஒருசாமத்துக்கொருதபா கண்ணிற்பிழிந்து பனைமட்டைச்சா
று காணிச்சாறு ஆவின்பால் வகைக்குப்படி-ஙு-வீதங்கலந்ததில்
சிறுகீரைவேரை ஒருஎலுமிச்சங்காய்ப்பிரமாணம் அரைத்துப்
போட்டுக்குழம்பாய்க்காய்ச்சிக்காலையிற்றலையிற் றளமிட்டுமாலை
யில்ஸ்நானஞ்செய்தும் காலையில் ஆவின்பாலிற்சர்க்கரை கலந்து
கொடுத்து அசனத்திற்கு ஆவின்பாலுந்தயிருஞ்சேர்த்து இச்சா
பத்தியமாய்க்கொண்டுவரத்தீரும்.

மாலைசாசத்தின்குணம்

கண்ணுறுத்திவலித்தெரியும் கருவிழிசற்றேகலங்கியிருக்கும் தீபம்வேறாய்க்காட்டும்-

நிவர்த்தி

இந்துப்பு மஞ்சள் சாரடைவேர் துத்தம் இவைகளையோர்நிறையாய்ப்பழச்சாற்றில் அரைத்துக்கயிறுசெய்து முலைப்பாலிலுரைத்துக்கண்ணிலிடத்தீரும்

மணிவளர்த்திக்குணம்

கடைக்கண்ணிற்பலகாலும்மணிபோலெழும்புவதும்உடைவதுமாயிருக்கும்.

நிவர்த்தி

மிளகு செம்புப்பொடி ஞரிலைத்தாமரைவேர் தலையோடு துத்தம் பளிங்கிக்கல் வகைக்கு விராகனிடை-இ-வறுத்ததுருசு விராகனிடை-உ-இவைகளையெலுமிச்சம்பழச்சாற்றில் மூன்றுநாள்அரைத்துச்செப்புச்சிமிளிலடைத்துமருந்துமறையும்படி ஷ-சாற்றைவிட்டுமூடிவைத்திருந்துஉலர்ந்தபின்பெடுத்துஷ சாற்றாலரைத்துக்கயிறுசெய்துமுலைப்பாலிலுரைத்துக்கண்ணிற்றீட்டிவந்தாலும் சூதம் விராகனிடை-க-காரீயம்விராகனிடை-உ- துத்தம் விராகனிடை-ச-சங்கு விராகனிடை-அ-தாம்பூரம் விராகனிடை-யசு-இவைகளைப்பழச்சாற்றிலரைத்துககயிறுசெய்து ஆவினெயிலுரைத்துக்கண்ணிற்போட்டுவந்தாலுந்தீரும்.

ஒருபலச்சிற்றாமணக்கின்வேர்ப்பட்டையையிடித்து இரண்டுபடி தண்ணீரிற்போட்டுவற்றவைத்திறுத்துவடித்துக்குழம்பாய்க்காய்ச்சிக்கல்வத்திலிட்டுக்கடுக்காய்த்தூளுஞ்சர்க்கரையும் சமமாய்ச்சேர்த்து மைப்போலரைத்துப்பின்புதேன்விட்டுக்களிபோலரைத்துக் கொண்டுகண்ணிற்போட்டுவந்தாலும்துத்தத்தைபெலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துக்கயிறுசெய்து முலைப்பாலிலுரைத்துக்கண்ணிற்றீட்டிவந்தாலுந்தீரும்.

ஷபிணியோகங்கட் செய்யும்போது காலையில் முலைப்பாலிற் புளியைக்கரைத்துக் கொதிக்கவைத்துத் துணியிற்கட்டிஒத்தணஞ்செய்தும் கண்ணிற்புறவளையமிட்டு மாலையிற் கடுக்காய்த்தூளும் இந்துப்பும் சர்க்கரையும் வெதுப்பித் துணியில்முடிந்தொத்தணஞ்செய்தும்வர

மந்தாரகாசத்தின்குணம்

கண்சுற்றெல்லாம் வளையுண்டாகி அரிப்பெடுக்கும் கண்ணி வந்துவலிக்கும் விழிசிறுக்கும்

நிவர்த்தி

துத்தம் துருசு வகைக்கு விராகனிடை -க- சிறுகீரை பொன்னாங்காணி ஓரிலைத்தாமரை யிலைகளின்வேர் வகைக்கொருபலக்களவுஎலுமிச்சம்பழச்சாற்றால் மைப்போலரைத்துக்காசுபோல் வில்லைதட்டிக் காயவைத்துப் புதுச்சட்டியிற்பரத்தி மறுசட்டி கொண்டுமூடி நால் நாழிகை யெரித்துப் பஸ்பித்துச் சிமிளிலடைத்துக்கொண்டு எட்பிரமாணம் கண்ணிலிட்டு குமரி மணிவேலிப்பரித்தி பொன்முசுட்டை இவைகளின்சாறு நல்லெண்ணெய் ஆவின்பால் வகைக்குப்படி -உ- வெப்பாலா நெருஞ்சி விஷ்ணுகாந்தி லாமிச்சுவேர் வெட்டிவேர் கொத்தமல்லி கோஷ்டம் வகைக்குப்பலம் -வ- வீதமரைத்துப்போட்டுப்பதமாய்க் காய்ச்சிவடித்து முழுகத்திரும்

உளைவுகண்ணின்குணம்

கண்மணியினுள் எப்போதும்உளைத்துவலிக்கும்

நிவர்த்தி

வெள்ளைக்காக்கணன்வேர் விராகனிடை -க- வெண்குன்றிவேர் விராகனிடை உ வெள்ளைச்சாரணைவேர்விராகனிடை-ஈ-மஞ்சள் விராகனிடை -ச- துத்தம் விராகனிடை -ரு- துருசு விராகனிடை -சா- இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துக் கயிறுசெய்து முலைப்பாலிலுரைத்துக் கண்ணிலிடத்திரும்

கண்ணுளைவுகண்சுருங்கல் ஒட்டுக்கண் மலங்குகண்

முதலானவியாதிகட்கு மாத்திரை

துத்தம் இரும்புப்பொடி முத்து முட்டைத்தோல் பச்சைக்கர்ப்பூரம் வகைக்குக்கழஞ்சு -க- செம்புப்பொடிகழஞ்சு -உ- பொன்மஞ்சாடி -க- பவளம் வெள்ளி வகைக்குக்கழஞ்சு -இ- பொடித்துப்போட்டு எலுமிச்சம்பழச்சாற்றிலும் முருங்கைப்பூச்சாற்றிலும் காடிநீரிலும் தனித்தனியே அரைத்துக்கயிறுசெய்து தேனிலாவதல்லது கோசலம் நெய் முலைப்பால்வகைக்குப்படி -ஹு- ஒன்றாய்க்கலந்து நீர்வற்றக்காய்ச்சிவடித்த நெய்யிலாவதுரைத்துப்போடத்திரும்.

வர்ணம் சுக்கிலம் உளைவிற்கு

திரிபலை தேற்றுவிலா தாமரைமணி ஓர்நிறையாய்க் குமரிச் சாற்றிலரைத்து மூலைப்பாலிலுரைத்து -௨௧- நாள்கண்ணிற் போட்டுவரத்தீரும்

சுருங்குகண்ணின்குணம்

குவளைப்புண்ணாகி நாட்குநாட் கண்சுருங்கும்.

சங்கு காந்தம்கடல்நுரை நன்றாய்ச்சுட்டசெங்கற்பொடி இந்துப்பு மனோசிலை சயிலம் பீதரோகணிபச்சைக்கர்ப்பூரம்சமமாய்நந்தியாவட்டப்பூச்சாற்றிலரைத்துலர்த்திப்பின்பு வெண்ணெய்யைக்கூட்டி மைப்போலரைத்துக்கண்ணிற்றீட்டிவரசுருங்குகண் முதலானவியாதிகளுந்தீரும்.

ஒட்டுக்கண்ணின்குணம்

கண்ணிலெப்பொழுதும் பீளையும் நீருஞ்சொரியும்.

நிவர்த்தி

துத்தம் துருசு புளியம் பொருக்குச்சுட்டசாம்பல் கடுக்காய்க்கரிப்பிவைகளோ யோர்நிரையாயாவின்வெண்ணெயாலரைத்துக்கண்ணிற்போட்டத்தீரும்.

மலங்குகண்ணின்குணம்

இராக்காலத்திற்கண்ணில்நீர்செம்பிப்பகலில் மலங்கும்.

நிவர்த்தி

சமுத்திராப்பழத்தைச்சுத்திசெய்துகலவத்திட்டு ஆவின்வெண்ணெயைக்கூட்டிக்களிம்புபோலரைத்துக்கண்ணிற்றீட்டி இதனடியிற்கண்டிருக்கும்பக்குவத்தைச்செய்துவரத்தீரும்.

கண்மந்தம் நீர்ப்பாச்சல் மலங்கல்பித்தத்திற்கு

சந்தனம் குமரிமணி அதிமதுரம்வகைக்குப்பலம்-க- இவைகளைக்காற்படி ஆவின்பாலிலரைத்துக்கலக்கிக்காய்ச்சித்தலையிற்றளமிட்டுமாலையிற்ஸ்நானஞ்செய்துவரத்திரும்

இமைசுழிந்துநீர்வடிந்துபரபரத்துவேதினைகண்டால்

கதிரைக்காய்ச்சிநெற்றியிற்சுடத்திரு................ம்

கக்கட்டிக்கு

நன்னாரி விளா சங்கு இவைகளின்வேரும் அதிமதுரமும் ஓர்நிறையாய் மைப்போலரைத்துக் காடியிற்கலச்சி கரண்டியிற்

கொதிக்கவைத்து இருப்புத்தடியாற்களிம்புபோற்றேய்த்துக்கண்ணிற் கொஞ்சம்போட்டுக்கட்டிபிலும்பூசத்திரும்

முடமயிருக்கு

செண்பகப்பூ சந்தனம் சிறுநாகப்பூ வெட்டிவேர் லாமிச்சம்வேர் கற்கண்டு சாதிக்காய் தக்கோலம் சீந்தித்தண்டு வகைக்கொருகழஞ்சு வீதமரைத்து எட்டுப்படி தண்ணீரிற்போட்டு ஒருபடியாய்வற்றவைத்து அதைப்பிச்சாங்குழலினாற் கண்ணிலடித்து மயிரையுதிர்த்து அரிதாரம் இந்துப்பு செம்புப்பொடி யிவைகளையோர்நிறையாய்த்துளசிச்சாற்றிலரைத்துக் கயிறுசெய்து முலைப்பாலிலுரைத்துக் கண்ணிலிட்டுவந்தாலும் சீனிக்காரம் துத்தம் துருசு மயில்முட்டைத்தோல் கோழிமுட்டைத்தோல் வகைக்கொரு கழஞ்சுவீதம் பொடித்துக்கொண்டு எட்பிரமாணம் கண்ணிற் போட்டுவந்தாலுந்திரும்.

இருண்டகண்ணுக்கு

நெல்லிமுள்ளி புங்கவிரை வெள்ளுள்ளி சிறுகிரை இவைகளைச்சமமாய்மெழுகுபோலரைத்துண்டைசெய்து முலைப்பாலிலுரைத்துக்கண்ணிற்போட்டுவந்தாலும் ஆவரங்கரி கடுக்காய்க்கரி சவு[illegible]ாரம் வகைக்குவிராகனிடை -க- துருசு விராகனிடை -வ- எரும்புவிராகனிடை-ச- இவைகளைப்பசுவின்பால்விட்டு மைப்போலரைத்துக்குளிகைசெய்து முலைப்பாலிலுரைத்துக்கண்ணிற்றீட்டிவந்தாலும் துத்தம் துருசு வெள்ளைச்சாரணைவேர்சோகி வகைக்குக்கழஞ்சு-க-எலுமிச்சம்பழச்சாற்றிலாட்டிக்கயிறுசெய்து கொண்டு புளியிலைச்சாற்றிலாவது அவுரியிலைச்சாற்றிலாவதுரைத்துக் கண்ணிற்போட்டுவந்தாலுந்தீரும்

இரத்தப்பாச்சலுக்கு

தேட்கொடுக்கிலையைக் கசக்கிக் கண்ணிற்பிழிந்துவரத்திரும்

கண்ணெரிவிற்கு

மாதுளம்பூ நற்சீரகம் நெருஞ்சிக்காய் இவைகளை யோர்நிறையாய்ப்பனைமட்டைச்சாற்றிலரைத்துக்கயிறுசெய்துகொண்டு முலைப்பாலிலுரைத்துக்கண்ணிற்றீட்டிவந்தாலும் செஞ்சந்தனம் சாத்திரவேதி தேற்றுவிரை யிவைகளையோர் நிறையாயரைத்து வெண்ணெயிற்குழைத்துப் புருவளையமிட்டுவந்தாலும் ஒருபு

டி ஆவின்பாலில் ஒருபலபொன்னாங்காணிவேரையரைத்துக் கலக்கிக்காய்ச்சி உரககூத்திக்கடைந்து வெண்ணெய்யெடுத்துக் கண்ணிற்போட்டுவந்தாலுந்தீரும்

கொமட்டிப்படகண்வேதனைக்கும்
கோளாப்பட்டதற்கு............ம்

மண்சட்டியைக்காயவைத்து அதில்முருக்கிலைச்சாறுவிட்டு க்கண்ணிலாவிபிடித்து புளியிலை துளசியிலை வலைக்கொருபிடி கடுக்காய் -ம- இவைகளையிடித்துப்பிட்டவித்துத்துணியில் முடிந்து ஒருசொட்டுச்சாறுகண்ணிற் பிழிந்து வெதுப்பத்துடன் ஒத்தணஞ்செய்து அப்பாலந்தச் சாற்றில் எலுமிச்சம்பழத்தோடு சுட்டகரியையரைத்துக் கலக்கிக் கொதிக்கவைத்துப் புறவளையமிட்டாவது அல்லதுகோழிமுட்டைத்தோடு வெண்ணொச்சியிலை திப்பிலி தேற்றான்விரைமிளகு இவைகளையோர்நிறையாய் எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்துக் கொதிக்கவைத்துப் புறவளையமிட்டாவது அல்லது கருஞ்சாங்கோரைவேரை ஷ சாற்றிலரைத்துப்புறவளையமிட்டாவது அல்லது மண்ணாங்கட்டியைப்பழுக்கக்காய்ச்சியதில் முலைப்பாலாவது முருக்கிலைச்சாறாவது விட்டு ஆவிபிடித்து ஷ கட்டியை யரைத்துக்கண்ணிற்புறவளையமிட்டாவது ஆவிநெய் [illegible]ரு மணக்கெண்ணெய் நல்லெண்ணெய் பொன்னாங்காணிச்சாறு இவைகளை யோரளவாய்க்காய்ச்சிச் சிரசிற் பதமிட்டுப் பொன்னாங்காணி ஓரிலைத்தாமரை வெள்ளைக்காக்கணன் சிறுகீரை இவைகளின்வேரைச்சமமாய் எலுமிச்சம்பழச்சாற்றில் மைப்போலாட்டியுலர்த்தி அப்பால ஆவின்வெண்ணெய்கூட்டிக்களிம்புபோலரைத்துக்கண்ணிற்போட்டுவந்தாலும் அல்லது கீழ்க்காய்நெல்லி சமூலமும் சுருள்ளியுமோர்நிறையாய்ச்சிதைத்துத் துணியில்முடிந்து கண்ணிற்பிழிந்துவந்தாலுந்தீரும்

கண்ணிற் புழுவெட்டிப்புண்ணுக்கு

துத்தம் துருசு வெள்ளைப்பாசாணம் இவைகளை யோர்நிறையாய்ப் பொன்னாங்காணியிலைச்சாறிலும் சிறுகீரைச்சாற்றிலும் ஒருநாளரைத்து வில்லைதட்டிக்காயவைத்து ஷ மூலிகையின்வேர்களை விளாங்காய்ப்பிரமாணமரைத்துக்குகைபிடித்து அதில் ஷ வில்லைகளைவைத்துப் பொதிந்து புளியம புறணிக்குள்வைத்து பு

17



டம்போட்டு ஆவின்வெண்ணெய்கூட்டிக் களிம்புபோலரைத்து க்கொண்டு புருவத்திலிட்டுவர புழுசெத்துப் புண் ஆறும் மயிர் முளைக்கும்

வேறு

வெள்ளைச்சீலையில் எருக்கலம்பாலையூட்டி நிழலிலுலர்த்தித்திரி யுருட்டி விளக்கிற் பசுவின்னெய்விட்டுத் தீயமேற்றிப் புதுச்சட்டி த்தாரில் ஊமத்தஞ்சாறுபூசி மைப்பத்தவைத்துதிர்த்து விளக்கெ ண்ணெய்யில் மத்தித்துக் கொண்டு கண்புருவத்திற் போட்டுவர த்தீரும்

வேறு

விருலைக் குடல் சிலாம்புநீக்கிக் காயப்போட்டு மைப்போ ற்பொடித்துக்கொண்டு கண்ணிமையிற் பனைவெல்லத்தைப்பூசி யதின்மேல் மெல்லியவெள்ளைத்துணியில் வெண்ணெய்யைத்தட விமுடிஅதின்மேற் பொடியைத்தூவி ஓரிரவுமல்லாக்கப்படுத் திருக்கப் புழுவெல்லாந்துணியில்வந்து ஒட்டியிருக்கும் காலையி ல் அத்துணியைத்தண்ணீரிற்போட்டுப் பார்த்தால் புழுவெல் லாந்தண்ணீரிற்மிதக்கும் இந்தப்படி மூன்றுநாட்செய்து அப் பால் சிவந்திலொட்டியிருக்கிற நாட்பட்ட எலும்பை தேனிலா வது முலைப்பாலிலாவது அரைத்துப் புருவத்திற்போட்டு வரப்புழு வெட்டுமாறி புண் ஆறி மயிர்முளைக்கும்

வேறு

முத்துருக்கஞ்செவிவேளை முலைப்பாலிலரைத்துப் புருவ த்திற்றடவிவர புழுவெட்டுமாறிமயிர்முளைக்கும்

கண்பூவுக்கு

தேட்கொடுக்கிலையும்நந்தியாவட்டப்பூவும் ஓர்நிறையாய்க்க சக்கிக் கண்ணிற்பிழிந்தாலும் சிறுகிளாவேர் கடுக்காய் இந்துப்பு பழம்புளி இவைகளையோர்நிறையாய் முலைப்பால்விட்டுத் தட்டி த்துணியில்முடிந்து நாளொன்றுக்கு மூன்றுதபாவாக மூன்று நாட்பிழியத்தீரும் மொசுமுசுக்கையிலையும் நற்சீரகமும் ஓர்நி றையாய் முலைப்பால்விட்டுச்சிதைத்துப் பிழியத்தீரும் உத்தமதா ளி நெருஞ்சி முருங்கையிவைகளின் பூவும் வெள்ளைச்சாரணைக் கொழுந்தும் நாய்வெள்ளைக்கொழுந்தும் சுருள்ளியும் நற்சீரகமு

ம் ஓர்நிறையாய்முலைப்பால்விட்டுச் சிதைத்துக் கண்ணிற்பிழியத் தீரும்

பூநாகம் வெள்ளைக்காக்கணன்வேர் வெள்ளைச்சாரணைவேர் துருசு துத்தம் பவளம் முத்துசெப்புப்பொடி பொன் ஓர்நிறையாய்ஊமத்தஞ்சாற்றாலரைத்துக்கயிறுசெய்துமுலைப்பாலிலுரைத்துக்கண்ணிற்போடத் தீரும்ஆணிப்பூவும் மாறும்

வேறு

கணவாயோடுதுத்தம் துருசு ஓர்நிறையாய்க்குப்பைமேனிச்சாற்றிலரைத்துக்கயிறுசெய்து தேனிலுரைத்துப் போட்டுவந்தாலும்வரப்பூலாஅந்திமல்லிகை ஓரிலைத்தாமலா நந்தியாவட்டம்இவைகளின் வேரும் பூவும் துத்தம் துருசு ஆமையோடு வெந்ததலையோடுபலகறைஇவைகளைஓர்நிறையாய்ப் பனைமட்டைச் சாற்றிலரைத்துக்கயிறுசெய்துகொண்டு ஷெசாற்றிலுரைத்துக் கண்ணிற்றீட்டிவரத்தீரும்

வேறு

சீனிக்காரத்தைப் பீங்கானிலிட்டு எலுமிச்சம்பழச்சாறுவிட்டுக் காயவைத்து அந்தச்சீனிக்காரமும் பச்சைக்கர்ப்பூரமும்ஓர்நிறையாய் முலைப்பாலிலுரைத்துக் கண்ணிற்றீட்டிவந்[hole]லும் பூவிழுந்தகண் புறத்தின்காற்பெருவிரலைக் கயிற்றினாற்கட்டி-எ-உத்தாமணிப்பூவைக் கசக்கிக் கண்ணிற் பிழிந்துவந்தாலுந்தீரும்.

பூவெள்ளெழுத்திற்கு

பீதரோகணி நற்பவளம் சாரடைவேர் இவைகளைச் சமமாய்த்தண்ணீரிலரைத்துக கயிறுசெய்து முலைப்பாலிலுரைத்துப் போடப் பூமாறும் தண்ணீரிலுரைத்துப் போட வெள்ளெழுத்துவாங்கும்.

ஆணிப்பூவுக்கு

துத்தம் பலகறை தேற்றாங்கொட்டை மனோசிலைதலையோடு மிளகுதிப்பிலி சேவல்நெஞ்செலும்புவகைக்குக்கழஞ்சு-இ-இவைகளையெலுமிச்சம்பழச் சாற்றிலரைத்துக் கயிறுசெய்து காடியிலுரைத்துக்கண்ணிற் போட்டுவந்தாலும் அல்லதுகடல்நுரை மிளகு சீனிக்காரம் அதிமதுரம் வெண்காரம் கடுக்காய் துருசு துத்தம் மனோசிலை அரிதாரம் திப்பிலி செம்புப்பொடி யோர்நிறையாய்

எலுமிச்சம்பழச்சாற்றி லரைத்துக்கயிறுசெய்து முலைப்பாலிலு ரைத்துப்போட்டுவந்த ராலுந்தீரும்

வேறு

நத்தைக்கூடு மிளகு ஆமையோடு முதலைப்பல்பன்றிக்கொம்பு சேவல்நெஞ்செலும்பு வெள்ளி புலிநகம் இவைகளையோர் நிறையாய் முலைப்பால்விட்டு மைப்போலரைத்துக் கயிறுசெய்து கொண்டு தேனிலுரைத்துக்கண்ணிலிட ஆணிப்பூ முளைமாறும்

பூ படலம் அதிமாங்கிசவளர்த்தி

ஆமையோடு முதலைப்பல் யானைத்தந்தம் தேற்றாவிரை துத்தம் துருசு இவைகளையோர்நிறையாய்க் காடியிலரைத்துக் கயிறுசெய்து மேற்படிதண்ணீரிலுரைத்துப்போட்டுவரத்தீரும்

பூ படலத்திற்கு

கடுக்காய் திப்பிலி வெண்காரம் சந்தனம் கடல்நுரை வெள்ளிலோத்திரம் வகைக்குக்கழஞ்சு -௧- சங்கு பவளம் துருசுவகைக்குக்கழஞ்சு -௨- இவைகளைமுருங்கைப்பூச்சாற்றிலரைத்துக் கயிறுசெயது கண்ணிற்போட்டுவரத்தீரும்

முளை ஆணிப்பூவுக்கு

துத்தம் துருசு சீனிக்காரம் வெள்ளைக்காக்கணவேர் வளலுப்புஇவைகளையோர்நிறையாய் ப் பனைமட்டைச்சாற்றிலரைத்துக கயிறுசெய்து கொண்டுமுலைப்பாலிலுரைத்துக் கண்ணிலிட்டுவரத்தீரும் அல்லது புளியிலையைஎலுமிச்சம்பழச்சாறு விட்டுச்சிதைத்துப்பிழிந்துஅதிற்றேற்றாவிரையும் பச்சைக்கர்ப்பூரமும் உரைத்துப்போட நீங்கும்

பூ படலம் காசத்திற்கு

முத்து பவளம் துத்தம்துருசு பளிங்கிக்கல் பிரங்காரேறிகாரீயம் இரதம் சீனிக்காரம் வெண்காரம் வெந்தயம் தலையோடு இவைகளையோர்நிறையாய்எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துக் கயிறுசெய்துமுலைப்பாலிலுரைத்துக் கண்ணிற்போட்டுவரத்தீரும்

குந்தத்திற்கு

பச்சைக்கர்ப்பூரம் காரீயம் ரசம்மஞ்சள் திப்பிலி மிளகு இவைகளையோர்நிறையாய் நந்தியாவட்டப்பூச்சாற்றி லரைத்துக் கயிறுசெய்து கொண்டு முலைப்பாலிலுரைத்துக்கண்ணிற் போட்டு

வந்தாலும் புளியங்கொழுந்தை யிடித்துச்சாறுபிழிந்து குழம்பாய்க்காய்ச்சிக் கல்வத்திட்டு இந்துப்பு துத்தம் ௯ருசு வகைக்குவிராகனிடை-க-இவைகளைப்பொடித்துப்போட்டு அரைத்துலர்த்திப் பின்புதேன் விட்டுக்குழம்புபோலரைத்துக் கண்ணிற்போட்டு வந்தாலும் இவ்வப்பைப்பிண்ணுக்கு விராகனிடை ரு துத்தம் துருசு வகைக்குவிராகனிடை -உ-இவைகளைக்காடியிலரைத்துக் கயிறு செய்து கொண்டதிலுரைத்துப்போட்டுவந்தாலுந்திரும்.

குந்தம் அமரத்திற்கு

சங்கு இந்துப்பு பளிங்கிக்கல் மஞ்சள் சந்தனம் மனோசிலை மிளகு இவைகளையோர்நிறையாய் ஆவின்பால்விட்டரைத்துக்கயிறுசெய்து கொண்டு தேனிலுரைத்துக்கண்ணிற்றீட்டிவர திரும்.

இழிகண்ணுக்கு அதுவேயிமைதிறக்கண்

வெண்காரமும்மயிர்சுட்டசாம்பலுமோர்நிறையாய்நெய்யாலரைத்துக்களிம்புசெய்துகண்ணிமையிற்போட்டுவந்தாலும்கலவத்திற் சங்கிலைச்சாறுபிழிந்துக்குழவியாற்களிம்புபோலரைத்துக்கண்ணிற்போட்டுவந்தாலும் சேங்கொட்டைச்சுட்டகரியும் துருசும் ஓர் நிறையாய்ப்பொடித்து ஆவின்வெண்ணெய் கூட்டிக் களிம்புபோலரைத்து இமையின்பேரிற்போட்டுவந்தாலும் இழிகண்மாறி திர்ந்தமயிர் முளைக்கும்.

குந்தம்பூவிற்கு

சிறுகீரைபொன்னாங்காணி வெள்ளைச்சாரணை வெள்ளைக்காக்கணான் இவைகளின்வேர் தேற்றாவிரை மண்டையோடு நாய்ப்பல்சேவல்மார்பெலும்பு முத்து பவளம் இவைகளை நந்தியாவட்டப்பூச்சாற்றில்மைப்போலரைத்து லர்த்திபின்பு நல்லெண்ணெய் விட்டுக்களிம்புபோலரைத்துக்கண்ணிற்றீட்டிவரத்திரும்.

அழிகண்ணிற்கு

இந்துப்புங்கடுக்காய்விரையும் ஓர்நிறையாய்வெண்ணெயாலரைத்துசெம்புப்பாத்திரத்திலப்பிவைத்திருந்துகளிம்பூறிப் பசுமையானதின்பேரிலெடுத்துக்கொண்டுகண்ணிற்போட்டுவந்தாலும் அல்லதுபூநாகத்தைத்துணியில்முடிந்து உமிக்காந்தலிற்புதைத்தெடுத்து அதற்குநிகர் நாவற்கொழுந்து சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துலர்த்திவெண்ணெய்கூட்டிக்களிம்பு போலரைத்துக்கண்ணிற்றீட்டிவர அழிகண்வறணம் சுக்கிரன்திரும்.

கண்புண்ணிற்கு

துத்தம் துருசு வகைக்குவிராகனிடை-க- இரதம் விராகனிடை-இ- மிளகு விராகனிடை-வ- வெற்றிலைச்சாற்றில்மைப்போலரைத்துலர்த்தியப்பால்வெண்ணெய் கூட்டிக்களிம்புபோலரைத்துக்கொண்டுபுண்ணிற்போடத்திரும் சேவற்பூவையருத்ததில்வருகிறஇரத்தத்தைமூன்றுநாள் இருபோதுபோடத்திரும்.

நேத்திரவாயுக்கு

துத்தம்துருசு வகைக்குவிராகனிடை -க- சீனிக்காரம் விராகனிடை -உ- இரண்டுசேங்கொட்டையைச் சுட்டகரி இவைகளை ஆவின்வெண்ணெயாலரைத்துக் களிம்புசெய்து கண்ணிற்போடவும் தாமரைக்கிழங்கு நெல்லிக்காய் பொன்னாங்காணி இவைகளின்சாறு சிற்றாமணக்கெண்ணெய் இளநீர் வகைக்குப்படி -இ- நல்லெண்ணெய்படி -உ- இவைகளைக்கலந்ததில் லாமிச்சவேர் தாளிசபத்திரி சண்பகப்பூ சிறுநாகப்பூ சந்தனம் செங்கழுநீர்க்கிழங்கு கோஷ்டம் வகைக்குப்பலம்-க-இவைகளை ஆவின்பாலிலரைத்துப் போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்துமுழுகிவரத்திரும்

நேத்திரவாயு மண்டையிடிக்குத்தயிலம்

பொன்னாங்காணி கையாந்தகரை காத்தட்டி கர்ப்பூரவெற்றிலை இவைகளின்சாறு நல்லெண்ணெய் விளக்கெண்ணெய் ஆவினெய் வகைக்குப்படி-இ-ஷி-பால் படி-ரு-இவைகளைக்கலந்ததிற் மிளகுகஸ்தூரிமஞ்ஞள் கருஞ்சீரகம் நற்சீரகம் வெள்ளைப்பூடு ஏலம்கிராம்பு சந்தனம் வாய்விளங்கம் வகைக்கு விராகனிடை -சு- ஷிசாற்றிலரைத்துப் போட்டுப்பதமாய்க்காய்ச்சி வடித்துமுழுகிவரத்திரும்

நல்லெண்ணெய்படி- வ -சீராசெங்கழுநீர்ச்சாறுபடி-வ-இவை களைஒன்றாய்க்கலந்து அதில்வெள்ளைப்பூடு பலம்-ரு-மிளகுபலம்-க-வெந்தயம்பலம்-க-இடித்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துத்தலைமுழுகிவரத்திரும்

ஒளிமயக்கம்வெளிமயக்கத்திற்கு

முசலின்புழுக்கை சுட்டசாம்பலை ஆவினெய்விட்டுக் களிம்புபோலரைத்துக் கண்ணில்திட்டிவரத்திரும்

கண்ணில்நீரோத்தத்திற்கு

பச்சைக்கர்ப்பூரத்தைப்பொன்னாங்காணிச்சாற்றிலரைத்து

நாசியில்நசியஞ்செய்து ஆவரங்கொழுந்தைச்சட்டியில் வறுத்துஆவின்பால்தெளித்துக் கண்ணில்ஆவிபிடித்து அகிற்கட்டை ஆயிற்பட்டை கருங்குங்கிலியம் சதகுப்பை ஓமம் சுக்கு மிளகு வசம்பு மஞ்சள் இவைகளை ஓர்நிறையாய்ப் பொடித்துத்துணியிற்பரத்தி யுருட்டித் தீயிற்கொளுத்தி நாசியிற் புகைபிடிக்கத்தீரும்

### சூடுவளர்த்திக்கு

துத்தம் துருசு சிவந்தசெங்கற்பொடி இவைகளை ஓர்நிறையாய் மாட்கிழங்கைவாட்டிப்பிழிந்த சாற்றில்மைப்போலரைத்துலர்த்திப் பின்பு ஆவின்வெண்ணெய்கூட்டிக் களிம்பாயரைத்துச்சூட்டின்மேற் போடத்தீரும்

### கண்கூச்சத்திற்கு

வேப்பங்கொழுந்து கர்ஞ்சைமணி கடுக்காய்தேற்றுவிரை இவைகளையோர்நிறையாய் முலைப்பாலிலரைத்துக் கொதிக்கவைத்துப்புறவளையமிட்டு பொன்னாங்காணிவேர் அதிமதுரம் இவைகளை முலைப்பால்விட்டுச் சிதைத்துத்துணியில்முடிந்து முலைப்பாலில் ஊறவைத்துக் கண்ணில் நாளொன்றுக்கு-௬-௫-தபாவீதம் பிழிந்தும் கரண்டியில் நெய்யைவெதுப்பி யதில் ஷைபொட்டணத்தைநனைத்து வெதுப்பத்துடன் ஒத்தணஞ்செய்தும் வரத்தீரும்

### இமைத்தடிப்புக் கரிப்புக்கு

அரபொடியைச் சங்கிலைச்சாற்றிலும் குமரிவேர்ச்சாற்றிலும் சங்கம்பழச்சாற்றிலும் மயனமா யரைத்துலர்த்தி நல்லெண்ணெய்விட்டுக் களிம்புபோலரைத்துக் கொண்டு கண்ணிற்றீட்டிவரத்தீரும்

### கண்சிவப்பு நீர்வடிதலுக்கு

பரித்திவிரைப்பருப்பு மரமஞ்சள் திரிபலை இவைகளை ஓர்நிறையாய் மைப்போற்பொடித்துக் கண்ணிலிட்டும் அப்பால நந்தியாவட்டப்பூச்சாறு சிப்பிநீர் பனைமட்டைச்சாறு முருங்கைப்பூச்சாறு முலைப்பால் ஆவினெய்வகைக்குக் காற்படிவீதம் ஒன்றாய்க்கலந்து அதிற்சந்தணம் மரமஞ்சள் பனங்குருத்து வகைக்குக் கழஞ்சு-௨- இவைகளை அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்துக் கண்ணில்விட்டுத் தலையிற்காலையில் தேய்த்து மாலையில்ஸ்நானஞ்செய்து வரத்தீரும்

கண்சிவப்பு கடுப்பு பூ படலத்திற்கு

தேற்றுவிரை கடுக்காய்த்தோல் புளியவிரைத்தோல் இவைகளைமைப்போற் பொடித்துத் துணியில்முடிந்து முலைப்பாலில் ஊறவைத்துக் கண்ணிற்பிழிந்துவரத்தீரும்

விழிகண்குருடுக்கு

நன்றாய்வெந்தசெங்கலைப்பொடித்து வடிகட்டிக்கலவத்திட்டு ஆவின்வெண்ணெய் தேன் நல்லெண்ணெய் இவைகளில்வகைக்கொருசாமமரைத்துக்களிம்பு செய்துகண்ணிலிட்டாலும்பேய்ப்பிசலென்ற வொட்டுப்பில் தினைபோற் கதிருண்டாயிருக்கும் அதைக்கசக்கிக்கண்ணிற்பிழிந்துவரத்தீரும்.

கண்வலி மணிவளர்த்திபூவிற்கு

சண்பகப்பூ-௬௰-காரெள்ளுப்பூ-௩- நந்தியாவட்டப்பூ-௩-துளசிவேர் சங்கு தலையோடு வலைக்குக்கழஞ்சு-௧- துத்தங்கழஞ்சு-௨- இவைகளைப் புளியப்பூச்சாற்றிலும் எலுமிச்சம்பழச்சாற்றிலுமரைத்துக்கயிறுசெய்து முலைப்பாலிலுரைத்துக்கண்ணிலிட்டுவரத்திரும்.

வெக்கடுப்பு குத்து அமரம் கண்வலிக்கு

கழுவினகற்றாழஞ்சோறு விளாங்காய்ப்பிரமாணம்சீனிக்காரம் விராகனிடை-இ-ஈருள்ளி விராகனிடை -௩-இருப்புக்கிட்டம்விராகனிடை-௩-இவைகளைச்சிதைத்துத்துணியில் முடிந்துகொஞ்சம்புளியைத்தண்ணீரிற்கலக்கியதில் அப்பொட்டணத்தைக்கரைக்கவைத்துச்சூட்டுடன் கண்ணிலொத்தணஞ்செய்து ஒருதுளிகண்ணிற் பிழிந்து சந்தனம் ஏலம் நெல்லிமுள்ளி மிளகு பொன்னாங்காணி கழுவினகற்றாழஞ்சோறு சமன்கூட்டி ஆவின்வெண்ணெயிலரைத்துச்சிரசிற்றளமிட்டு உள்ளங்காலிற்றீப்பறக்கத்தேய்த்துமாலையிற்சுடுதண்ணீரில் ஸ்நானஞ்செய்துவந்தாலும் அல்லது எலுமிச்சம்பழத்தைப்பொத்து அதிலரயொடியுஞ் சீனிக்காரமும்ஓர்நிறையாயொன்றாய்ப் பொடித்துச்செலுத்தித் துணியிற்பொட்டணமாய்ப்பிடித்து நெருப்பில்வாட்டி ஒருசொட்டு கண்ணிற்பிழிந்துஒத்தணஞ்செய்துவந்தாலும் அல்லதுசிவத்தில் வெண்ணெயைஅப்பிநீர்வாங்கினதின்பின்னெடுத்துஅதில்எலுமிச்சம்பழச்சாறும் கரிப்பான்சாறும் விட்டுக்களிம்புபோலரைத்து

க்கண்ணிற்றீட்டியும் கடுக்காயையாவது உப்புமண்ணையாவது மூலைப்பாலிலுரைத்துக் கண்ணிற்புறவளையமிட்டும் வரத்தீரும்

கண்வலிக்கு

கரியுப்பைப் பொடித்துப் பொட்டணங்கட்டி நீராகாரத்தண்ணீரிற்றுவைத்து இரண்டுநாழிகைக் கொருதயா கண்ணிற்பிழியக் கண்வலிஉடனேமாறும்

சுக்கிரப்படுவனுக்கு

நவ்வற்பட்டையை மூலைப்பால்விட்டுச்சிதைத்துக் கண்ணிற்பிழிந்து அப்பால் நத்தைச்சதையையும் ஆனைநெருஞ்சிக்காயையும் சிதைத்துப்பிழிந்து ஆவரையரிசியை கோழிமுட்டைவெள்ளைக்கருவிட்டு அரைத்துப் புறவளையமிட்டாவது அல்லது கோவையிலைச்சாறும் கரிப்பான்சாறும் ஒன்றாய்க்கலந்து அதில் தேற்றாவிரை களிப்பாக்கு மிளகு இவைகளை யோர்நிறையாயரைத்துப்போட்டுக் கொதிக்கவைத்துப் புறவளையமிட்டாவது பொன்னாங்காணி சிறுகீரை ஆனைநெருஞ்சி உத்தமதாளி மயிர்மாணிக்கம் இவைகளின் சாறுகளைச்சமமாய்க்கலந்து தலையில் உலர உலரத்தேய்த்துக்கொண்டிருந்து மாலையில் ஸ்நானஞ்செய்துவந்தாலும் அல்லது நல்லெண்ணெய் படி -இ- வெள்ளுள்ளி முருங்கைவேர்ப்பட்டை குப்பைமேனி தும்பை யிவைகளின் சாறு வகைக்குப்படி -வ- ஒன்றாய்க்கலந்ததிற் கோஷ்டம் கழஞ்சு அரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்து மூன்றுநாட் காலையிற்றலையிறதேய்த்து மாலையில் ஸ்நானஞ்செய்துவரத்தீரும்

இழிகண்ணுக்கும் புழுவெட்டுக்கும்

குரவையைமுள் சிலாம்பு குடல்நீக்கியதின்பேரில்-ஏ- தபா எருக்கலம்பாலை உலர உலர ஊட்டிக் காயவைத்துப் பொடித்ததூளும் துருசும் துத்தமும் ஓர்நிறையாய்க்கூட்டி வேப்பெண்ணெய் விட்டு மைபோலரைத்துக் கொண்டு இமையிறபோட்டுவரத்தீரும்

கண்ணில்நெருப்புப்பட்ட புண்ணுக்கு

ஆவினெய்ஷை-இறைச்சிநீர் பனைமட்டைச்சாறு நல்லதண்ணீர் இவைகளை ஒன்றாய்க்கலந்து காய்ச்சி கண்ணிற்கட்டி வரத்தீரும்

அக்கரம்புழுவெட்டிற்கு

வேப்பங்கொழுந்தைக்கலவத்திலிட்டு நல்லெண்ணெய்விட்

டீக்களிம்புபோலரைத்துப்புருவத்திலிட்டுவரத்தீரும்.

### கண்பிரிதல்புழுவெட்டு பூவிற்கு

ஊமத்தங்காயைவிரைநீக்கியதற்குள் பாலிற்சுத்திசெய்தபூநாகத்தைநிறைப்போட்டுமூடிச்சட்டியில் வைத்தெரித்துச்சாம்பலாக்கியதற்குநிகர் துத்தம் துருசு சேர்த்து ஆவின்வெண்ணெயாற்களிம்புபோலரைத்துக்கொண்டுகண்ணிற்றீட்டிவரத்தீரும்.

### நீர்வடிதலுக்கு

வெள்ளைச்சாரணைவேரைத்தேனிலுரைத்துக்கண்ணிற்றீட்டிவரத்தீரும்.

### அந்தகக் கண்ணிற்கு

கெந்தகம் தங்கம் வகைக்குப்பலம்-க- அஞ்சனக்கல் காரீயம் வகைக்குப்பலம் -௩- வெள்ளி செம்பு வகைக்குப்பலம்-௨- இவைகளையொன்றாய்க்குகையிலுருக்கிமயனமாய்ப்பொடித்துக்கண்ணிற்றூவிவரத்தீரும்.

### அமரம் பிரிதற்கண்ணிற்கு

வேப்பங்கொழுந்தும் புளியங்கொழுந்தும் இடித்துக்கசாயஞ்செய்து வடித்துக்குழம்பாய்க்காய்ச்சி யதிற்றுணியையிரண்டு மூன்றுதரம் நனைத் துலர்த்தித்திரித்து விளக்கில் ஆவி[illegible]னய்விட்டுத்தீபமேற்றிச்சட்டித்தூரில் ஊமத்திலைச்சாறுபூசி மைப்பற்றவைத்து திப்பிலி கடுக்காய் நெல்லிப்பருப்பு இவைகளைஷிககசாயத்திலரைத்துத்துணியிற்பூசி முன்போற்றீபமேற்றிமைப்பற்றவைத்து இருவகைமையையும் ஒன்றாய்க்கலந்து ஆவின்வெண்ணெயைக்கூட்டியரைத்துக்கண்ணிலிட்டுவந்தாலும் அல்லது ஷிககசாயத்தில்மிளகையரைத்துலர்த்தி ஆவின்வெண்ணெய் கூட்டிக்களிம்புபோலரைத்துக்கண்ணிற்றீட்டிவந்தாலுநீங்கும்

### மெருளிக்கு

பலகறை சுட்டசாம்பல் துத்தம் துருசு மஞ்சள் இவைகளையோர்நிரையாய் நல்லெண்ணெயிலரைத்துத்துணியிற்பூசிக்கட்ட அற்றுவிழும் மூலமுளையிற்கட்டினாலும்விழும்.

### வரணம்சுக்கிலம் படலம்குத்தம் இரத்தச்செம்மைக்கு

நந்தியாவட்டப்பூ பிச்சிப்பூ முருங்கைப்பூ கொடுப்பைவேர்

அதிமதுரம் எலம் கோஷ்டம் செங்கழுநீர்க்கிழங்கு எலுமிச்சம்வேர் லவங்கம் துத்தம் கடல்நுரை பவளம் முத்து இவைகளையோர்நிரையாய் வெள்ளாட்டுப்பித்தாலாட்டிக்கயிறுசெய்துகொண்டு எலுமிச்சம்பழச்சாறும் ஆவினெய்யுமொன்றாய்க்கலந்துகாய்ச்சியதிலுரைத்துக்கண்ணிற்றீட்டிவரத்திரும்.

கண்கரித்துக்குத்திக்கலங்கிப்பொங்கி நீர்வடிந்தால்

சங்கு புங்கவித்து வெள்ளைக்காக்கணம்வித்து துத்தம் துருசு இவைகளையோர்நிரையாய்ப்பழச்சாற்றிலரைத்துக்கயிறுசெய்துமுலைப்பாலிலுரைத்து நாளொன்றுக்கு மூன்றுநேரம்போட்டுவரத்திரும்

வெள்ளெழுத்திற்குவெண்ணெய்

ஒரெலுமிச்சம்பழத்தைக்கயிற்றிற்கோர்த்து அதின்மேல் நூற்றெட்டுக்கிராம்பையூன்றி விளாங்காய்ப்பிரமாணம் பசுவின்வெண்ணெய்க்குட் பொதிந்துமூடியதைப் புதுச்சட்டியில் அடியிற்படாமல்தொங்கவிட்டு அன்றுடகம் வெவ்வேற சுத்தகெங்கைவார்த்துவந்து நாற்பதாம் நாளெடுத்து லவங்கத்தையும் பழத்தையும் நீக்கிச் செப்புச்சிமிளிலடைத்துக்கொண்டு சத்திசாரணைச்சாற்றில் கொஞ்சம் வெண்ணெய்யைமத்தித்து -௪௰-நாள்வரை போட்டுவர வெள்ளெழுத்தும் மற்ற கண்ரோகங்களுந்திரும்ஷெவெண்ணெய் பலம் -க- பீதரோகணிபலம் -௨- இவைகளையெலுமிச்சம்பழச்சாற்றால்ஒருநாளரைத்துச்செப்புச்சிமிளிலடைத்துக்கொண்டு கண்ணிற்போட்டுவர வெள்ளெழுத்து முதலாகிய கண்ரோகங்கள்திரும் ஷெவெண்ணெய்பலம் -க- மிளகுவிராகனிடை-இ-இவைகளைக்கலவத்திட்டு களிம்புபோலரைத்துக்கொண்டு கண்ணிற்போட்டுவர வெள்ளெழுத்து முதலானகண்ரோகங்கள்திரும் புரசம்பாலை ௪ ௬ நாள் கண்ணிற்போட்டாலும் அல்லது தும்பை நந்தியாவட்டம் காரோள் புளி இவைகளின்பூவும் திப்பிலியும் தேன்விட்டுக்களிம்புபோலரைத்துக்கொண்டு கண்ணிற்போட்டுவந்தாலும் அல்லது ஒரிலைத்தாமரைவேர் சங்கு தலையோடு துத்தம துருசு வெள்ளைக்கற்பொடி இவைகளையோர்நிரையாய் எலுமிச்சம்பழச்சாற்றிலும் முருக்கிலைச்சாற்றிலும் வகைக்கொருநாளரைத்துக்கயிறுசெய்து மூலைப்

பாலிலுரைத்துக் கண்ணில் ௪௰-நாட்போட்டு வரத்தீரும். மேற்காட்டியபிரயோகங்களிலொன்றை உபயோகப்படுத்திஇதனடியில்வருகிறதயிலத்தையும்முழுகிவரப்பிணிகள்நீங்கும்

வெள்ளெழுத்து குருட்டுக்கண்முதலானகண்
ரோகங்களுக்கும் உடம்புவலிக்குந்தயிலம்

பொன்னாங்காணிரசம்பொற்றலைக்கரிப்பால்ரசம் நெல்லிக்காய்ரசம் நல்லெண்ணெய் வகைக்குப்படி-௮- மொசுமுசிக்கை நெருஞ்சி கண்டங்கத்திரிக்காய் முள்ளிக்கத்திரிக்காய் தென்னம்பூ வில்வம் வாதநாராயணயிலை இவைகளின்சாறு இளநீர்வகைக்குப்படி-௧- இவைகளைஒன்றாய்க்கலந்ததில் நன்னாரிவேர்பலம்-௪௰-தாமரைப்பூமிளகு அதிமதுரம் சந்தனம் அறுகு மொக்கு வகைக்குப்பலம்-௨-சீரகம் கொத்தமல்லி வகைக்குப்பலம்-௪-கஸ்தூரிமஞ்சள் வெட்டிவேர் சோம்பு கல்லுப்பு லாமிச்சம்வேர் மல்லிகைப்புஸ்பம்வகைக்குப்பலம்-௧-இவைகளை யெட்டுப்படிஆவின்பாலிலரைத்துப்போட்டுப்பதமாய்க்காய்ச்சி வடித்துமுழுகிவரத்தீரும்

மாலைக்கண் வெள்ளெழுத்துப்புகைச்சலுக்கு

மிளகு திப்பிலி வகைக்குக்கழஞ்சு-௫- கடுக்காய்விரைகழஞ்சு-௯- இவைகளைத்தனித்தனி மூன்றுவெள்ளாட்டுப்பித்துக்குள் அடைத்துப்புகைப்படுகிறவிடத்திலொருமண்டலங்கட்டிவைத்திருந்தெடுத்துப்புளியம்பூச்சாற்றிலும் பனைமட்டைச்சாற்றிலுமரைத்துக்கயிறுசெய்து முலைப்பாலிலுரைத்துக் கண்ணிற்றீட்டிவரமாறும் சுழல்வண்டுசுட்டசாம்பல் வெள்ளுள்ளி மிளகு ஓர்நிரையாய்க்கல்வத்திட்டு வெற்றிலைச்சாறும் நீர்முள்ளிச்சாறும் நல்லெலெண்ணெயும் விட்டுக்களிம்புபோலரைத்து அந்திசந்தி மூன்றுநாட்கண்ணிற்றீட்டி விளக்கெண்ணெயைத்தேய்த்து நாலாந்துமுழுக்குமுழுகினால் அருந்ததிகண்ணிற்றோணும்.

நீலகாசம் பித்தகாசம் மந்தாரகாசம் படலம்பில்லம்
மயிர்குத்தல்புழுவெட்டுமாலைக்கண்நீர்வடிதல் குந்தம்
நேத்திரவாயுமுதலானதற் ... ... ... ... ... ... கு

முத்து வெள்ளி தாம்பூரம் சங்கு துருசு துத்தம் வெண்கலம் தலையோடு பொன் பீதரோகணி புங்கவிரை யோர்நிரையாய் எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துக்கயிறுசெய்துமுலைப்பாலிலானது

நந்தியாவட்டப்பூச்சாற்றிலாவதுரைத்துக்கண்ணில் இட்டியிதனடியிற்சொல்லிய தயிலத்தைமுழுகிவரத்திரும்.

சிரோகங்கட்குத் தயிலம்

பொன்னாங்காணி சிறுகீரை சீந்திக்கொடி எலுமிச்சம்பழம் நாரத்தம்பழம் இவைகளின்சாறு நல்லெண்ணெய் வகைக்குப் படி-க-முத்தக்காசு கோஷ்டம் மதுரம் ஏலம் சண்பகப்பூ சிறுநாகப்பூ லவங்கம் வகைக்குப்பலங்கால் வீதமஅரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித் துமுழுகிவரத்திரும்.

கண்வலி சிவப்பு கடுப்பு தினவு நீர்வடிதலுக்கு

தான்றிக்காய் மாசிக்காய் கடுக்காய் காசுக்கட்டி வகைக்கு விராகனிடை -க- அபின்பொரித்த சீனிக்காரம் வகைக்கு விராகனிடை-வ-கரண்டியிற்பொடித்துப் போட்டு அதில்வரப்புலாவிலை கருவேலிலை வகைக்கு ஓருபிடி வீதம் இடித்துப்பிட்ட வித்துச்சாறுபிழிந்துகொதிக்கவைத்து செப்புத் தடியால் மைப்போலரைத்துக்கண்ணிற் புறவளையமிட்டுப் புளியிலையை வேகவைத்ததண்ணீரால் கண்ணை கழுவி -உ- -ரு- தபாப்போடத்திரும். புளியைக்கரைத்துக் கண்ணில் ஒருநாளைக்கி-ச-தபாப்பிழிந்து துளசிபுண்ணாக்கிலை புளியிலை இலைவகைஓர்நிறையாய் இடித்துத் துணியிற் கட்டிகண்ணில் ஒத்தணஞ்செய்து ஆவரம்பூவை யரைத்துச்சிரசிற்றளமிடத்திரும்

இருப்புத்தகட்டை நெருப்பிற்சிவக்கக் காய்ச்சி யெடுத்து அதில் எலுமிச்சம்பழச்சாற்றையாவது புளியிலைச்சாற்றையாவது விட்டுக்கரியபவளமும் கடுக்காயத்தோலும் சீனிக்காரமும் பொடித்துப்போட்டுஇருப்புக்குழவியாற்களிம்புபோல்நன்றாயரைத்துப் புறவளையமிட்டு கருவேல் புளி ஓரிலைத்தாமரை பொன்னாங்காணி சிறுகீரை பஞ்சதிரவியம் கம்பிப்பிசின் மிளகு கஸ்தூரி மஞ்சள் இவைகளைஓர்நிறையாய்க் காடிவிட்டரைத்துக் குழம்பாய்க் காய்ச்சி சிரசிற்றளமிடத்திரும்

அல்லது கருக்கின புழுங்கலரிசியும் அபினும் சமமாய் ஊமத்தஞ்சாற்றில் மூன்போறகளிம்பாயரைத்துக்கண்ணிற்புறவளையமிட்டு கொடுப்பை சிறுகீரை வெப்பூலா மிளகு இவைகளைவகைக்குஎலுமிச்சங்காய்ப்பிரமாணமரைத்துக்காற்படிஆவின்பாலிற்கரைத்துக்குழம்பாய்க்காயச்சித்தலையிற்றளமிட்டுவரத்திரும்.

கோழிமுட்டையைப்பொத்து வெள்ளைக்கருவைப்பீங்கானில் விட்டு அதிற்கொஞ்சம் சீனிச்சாரத்தைப்போட்டுச்சிறுகீரைவேராற்கடைந்தால் வெண்ணெய்போலவரும் அதைக்கண்ணிற்போட்டுக்கருவேலங்கொழுந்தும் மாதுளங்கொழுந்தும்வகைக்கு ஒருபிடிவிதமிடித்துக் ௧ படி ஆவின்பாலிற்போட்டு வேகவைத்துப்பிழிந்து குழம்பாய்க்காய்ச்சி இருப்புத்தகட்டிலிட்டு இருப்புக்குழவியாற்களிம்புபோலரைத்துக்கொண்டாவது அல்லதுஇருப்புத்தகட்டைநெருப்பிற்காய்ச்சி யதிற்சீனிக்காரம் துத்தம் துருசு இவைகளையோர்நிறையாய்ப்பொடித்துப்போட்டு எலுமிச்சம்பழச்சாறுவிட்டு மைப்போலரைத்துக்கொண்டாவது கண்ணிற்புறவளையமிட்டு மேற்சொல்லியபுகையைக்கட்டிவரத்திரும்

கண்வலி வெகப்பு நேத்திரவாய்விற்கு

களிம்புள்ளவெங்கலத்தகட்டில் முலைப்பாலாவது எருமைப்பாலாவது விட்டுச்செட்புக்குழவியா லரைத்துக்களிம்புண்டாக்கி அந்தக்களிம்பைப் பரிக்கப ஆசிரு ட்டுக்குட்டகலத்தில் மூன்றுவில்லைசெய்து ஒன்றின்மேலொன்றைவைத்து ஓசட்டியில்புளியம்பொருக்குப்போட்டுத்தணலுண்டாக்கி அதிலரைவீசம்படி எள்ளைப்பொடித்துப்போட்டுப்புகைபஞ்சிலேறும்படிவைத்து மூடிப்புகையடங்கினதின்பேரில் காலை மாலை மதியத்தில் ஒவ்வொருவில்லையாக க்கண்ணிற்பிழிந்துவரத்திரும்.

கொடுப்பையரிலைத்தாமரைவெள்ளைக்காக்கணஞ் சிறுகீரைஇவைகளின்வேர்களை ஓர்நிறையாயெலுமிச்சம்பழச்சாற்றில் மயனமாய்அரைத்துலர்த்திப்பிசிப்பு வெண்ணெய் கூட்டிக்களிம்புபோலரைத்துக்கண்ணிற்றீட்டியாவது அல்லதுசங்கு புளி வெள்ளைச்சாரணைபொன்னுங்காணிசிறுகீரைகரிப்பான்இவைகளினிலைச்சாற்றைஓர்நிரையாய்க்கலந்துஅதிற்றுணியை-௫--௭-தபா நனைத்துலர்த்தித்திரித்துநண்டுக்கொழுப்பிற் றுவைத்துத்தீயிற் கொளுத்திச்சாம்பலாக்கியதில்வெண்ணெயைக்கூட்டிக்களிம்பு போலரைத்துக்கண்ணில் தீட்டியாவதுவரத்திரும்.

கண்வேதினைபலதுக்கும் புறவளையம்

சிற்றாமணக்கின்வேரும்பேராமணக்கின்வேரும் ஓர்நிரையாய்வேலிப்பருத்திச்சாற்றில் மைப்போலரைத்துக் கலக்கிக்குழம்பாய்க்காய்ச்சிக்கண்ணிற்புறவளையமிட்டுஉச்சியிற்றளமிட்டுவரத்திரும்

கண்வீக்கம் எரிவு தினவு படலம் சிவப்பு கடிப்பு நீர்வடிதலுக்குப்புறவளைய.........................ம்

கடுக்காய்த்தோல் நெல்லிமுள்ளி அதிமதுரம் தேற்றுவிரை கருவேவிலை புளியங்கொழுந்து இவைகளையோர்நிறையாய்க் கற்றாழைமடலுக்குட்பொதிந்து உமிக்காந்தலிற்புதைத்து வெந்தபதத்தில் மருந்தையெடுத்து முலைப்பால்விட்டுக்களிம்புபோலரைத்துக்கொண்டு கண்ணிற்புறவளையமிட்டும் காயா வரப்பூலா புளி இவைகளினிலைச்சாறு வகைக்குப்படி -வ- ஒன்றாய்க்கலந்ததில் நெல்லிமுள்ளி சந்தனம் தேற்றுவிரை ஆமையோடு இவைகளை ஆவின்பாலில்மைப்போலரைத்துப்போட்டுக குழம்பாய்க்காய்ச்சிச்சிரசிற் காலையிற்றளமிட்டு மாலையிற் சுடுதண்ணீரில் ஸ்நானஞ்செய்துவரத்தீரும்

## மேற்படிவியாதிகட்கு ஒத்தணம்

காயாவிலை கருவேவிலை கடுக்காய் கற்றாழஞ்சோறு இவைகளையொன்றாய்ச்சிதைத்தாவது அல்லதுமருதம்பட்டைசிரகம் மதுரம் இவைகளைச்சமமாய்ச் சிதைத்தாவது துணியில்முடிந்து அதைக்கரண்டியில் நெய்விட்டு வெதுப்பியதில் வைத்து ஒத்தணஞ்செய்தாவது அல்லது ஒருபடிஆவின்பாலில்ஒருபடிபுளியங்கொழுந்தும் நால் கடுக்காயுந் தட்டிப்போட்டு வேகவைத்துக்கண்ணிலாவிபிடித்து அதைத்துணியில் முடிந்து ஒத்தணஞ்செய்து புறவளையம் தளமுதலானபிரயோகங்களைச்செய்ய மிகுந்த நன்மையுண்டாம்.

## மேற்படிவியாதிகட்கு இமையின்மேலிடும்பஞ்சு

ஆவின்பாலில் உத்தாமணிவேரை யரைத்து ஷை நெய்யிற்போட்டு வேகவைத்து வடித்து இமையைச்சுற்றிப்பூசி யுலர்ந்தபின்பு சந்தனத்தைப்புறவளையமிட்டு இரவில் மேற்படி நெய்யிற்பஞ்சையூட்டி இமையின்மேற்போட்டு நித்திரைசெய்யவும்

## ஷை வியாதிகட்கு தாரைபுறவளையம்

சிற்றாமணக்கின்வேர் கடுக்காய்த்தோல்வகைக்குக்கழஞ்சு-சு- இடித்து இரண்டுபடிதண்ணீரிற்போட்டு-ஹு-படியாய் வற்றவைத்துவடிகட்டிக்கண்ணில் தாரைவிட்டாலும் அல்லதுமொசுமொசுக்கையிலையொருபிடி அதிமதுரம் மரமஞ்சள்வகைக்குக்கழஞ்

௬-௧-இவைகளைச்சிதைத்து ஆவின்பாலிலரைத்து ௭-நெய்யிற் போட்டுவேகவைத்துவடிகட்டிக் கண்ணில் தாரையிட்டு பொன்னாங்காணிவேர் சந்தனம் அதிமதுரம் இவைகளை ஓர் நிறையாய் முலைப்பாலிலரைத்துக கலக்கிவெதுப்பிக் கண்ணிற் புறவளையமிட்டு உச்சியிற்றளமிட்டுவரத்தீரும்

கண்ணிற் சதைவளர்த்திற்கு

ஈருள்ளியும் குருஞ்சாவும் ஓர்நிறையாய்ச்சிதைத்து மூன்றுநாட்கண்ணிற்பிழிபத்தீரும்

கண்ரோகங்களுக்குமாத்திரை

பச்சைக்கர்ப்பூரம் இந்துப்பு வகைக்கு விராகனிடை -௨- ரசம்விராகனிடை -௨-திப்பிலி மிளகு காரியப் வகைக்கு விராகனிடை -௩- பூநாகச்சத்து கடுக்காயப்பருப்பு வகைக்கு விராகனிடை -௧- அரிதாரம் விராகனிடை -௨- எலுமிச்சம்பழச் சாற்றில் -௩- நாள் அரைத்துக்கயிறுசெய்துகொண்டு முலைப்பாலிலுரைத்துக் கண்ணிற்றீட்டிவரப் படலம் பில்லம் சிவப்பு நீர்ப்பாய்ச்சல தடிப்புமுதலான கண் ரோகங்கள் தீரும்.

ஆமையோடு அஞ்சனக்கல் தலையோடு கல்மதம் குகிறைப்பல் யானைத்தந்தம் பன்றிக்கொம்பு சேவல்றெஞ்செலும்பு தேற்றான்விரை துத்தம் துருசு சங்கு முத்து காவிக்கல் கடலாமையோடு பீதரோகணி வெள்ளிலோத்திரம் இவைகளையோர் நிறையாய் எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துக் கயிறுசெய்து முலைப்பாலிலுரைத்துக் கண்ணிற்போட்டுவர படலம் பில்லம் வலி அழிகண் மணிவளர்த்தி முதலானவைகள் தீரும்.

திரிகடுகு திரிபலை வாலுளுவையரிசி வாய்விளங்கம் தாமரைக்கிழங்கு அதிமதுரம் செம்புப்பொடி இந்துப்பு செஞ்சந்தனம் முந்திரிப்பழம் மஞ்சள் நன்னாரிவேர் வெள்ளிலோத்திரம் துத்தம் பீதரோகணி காரியம் வெண்காரம் இவைகளையோர் நிறையாய் சங்கம்பழச்சாற்றிலரைத்துக்கயிறுசெய்துகொண்டு முலைப்பாலிலுரைத்துக்கண்ணிற்போட்டுவர திமிர் படலம் நீர்வடிதல காசமுதலானவைகள் தீரும்.

திரிகடுகு திரிபலை அதிமதுரம் பீதரோகணி பொன் மெழுகுவெள்ளைக்காக்கணம்வேர் இவைகளையோர்நிறையாய் கழுதை

ப்பாலிலும் ஆவின்பாலிலும் முலைப்பாலிலும் வகைக்கொருசாமமரைத்துக்கயிறுசெய்து முலைப்பாலிலுரைத்துப் போட்டுவந்தாலும் அல்லது பச்சைக்கர்ப்பூரம் காரீயம் திப்பிலி மிளகு வகைக்குக்கழஞ்சு -வ- இரதம் உகாய்விரை பூநாகம் வகைக்குக்கழஞ்சு -இ- இவைகளை யெலுமிச்சப்பழச்சாற்றிலரைத்துக் கயிறுசெய்து சிறு நீரிலுரைத்துப்போட்டுவந்தாலும் திமிர படலம் காசமுதலானவைதீரும்.

தாம்பூரம் துருசு துத்தம் முத்து பவளம் நீலம் கருவளையல் வெண்காரம் கணவாயோடு இவைகளைச்சமமாய்ப் பழச்சாற்றிலரைத்துக்கயிறுசெய்துகொண்டு புழுவெட்டு செவ்வேர் தசைவளர்த்திக்கு எலுமிச்சம்பழச் சாற்றிலும் நீர்ப்பாய்ச்சல் கூச்சத்திற்கு பனைமட்டைச்சாற்றிலும் பூ கட்டிக்குநெரிஞ்சியிலைச்சாற்றிலும் உரைத்துக்கண்ணிற்போட்டுவரத்தீரும்.

செம்புப்பொடி துத்தம் துருசு வெண்கலம் வளையல்வெள்ளைக்கல் ஓரிலைத்தாமரைவேர் வெட்பாலைவேர் வகைக்குக்கழஞ்சு -க- இந்துப்புக்கழஞ்சு -வ- எலுமிச்சம்பழச்சாற்றாலரைத்துக் கயிறுசெய்துகொண்டு முலைப்பாலிலுரைத்துப்போடச் சகல கண்ரோகங்களுந்தீரும்.

வெள்ளைக்காக்கணன்வேர் துத்தம் துருசு பளிங்கிக்கல் சங்கு மஞ்சள் திப்பிலி சந்தனம் பச்சைக்கர்ப்பூரம் செம்புப்பொடி இவைகளையோர்நிறையாய் எலுமிச்சம்பழச்சாற்றில -ரு- நாள் மெழுகுபோலரைத்துக்கயிறுசெய்து முலைப்பாலிலுரைத்துக்கண்ணிலிட்டுவரச் சகல காசம் சுத்துக்குலைவு அழற்றி உட்குத்து உளைவுமுதலான சகலகண்ரோகங்களுந்தீரும்.

வெங்காரம் செம்புப்பொடி வெண்கலம் காரீயம் வளையலோடு வெட்பாலைவேர்ப்பட்டை ஓரிலைத்தாமரைவேர் வகைக்குவிராகன் -க- இந்துப்பு விராகன் -வ- இவைமுருங்கைப்பூச்சாற்றிலும் எலுமிச்சம்பழச்சாற்றிலும் அரைத்துக்கயிறுசெய்துகொண்டு வரணசுக்கிரனுக்கு நாயுருவிச்சாற்றிலும் உத்தாமணிச்சாற்றிலும் கொடியஆணிப்பூ படலம் மந்தாரகாசம் நீர்ப்பாய்ச்சல் எழுச்சி வலி நெரி சிவப்பு அழிகண்ணுக்கு நீர்ப்பூலாவேர்த்தண்ணீரிலும் மேற்படியுண்டையும் சீனமும் வெங்காரமும் உரைத்துப்போடத்தீரும்.

பொன்னாங்காணி சிறுகீரை பூலா இவைகளின்வேர் திப்பிலி துத்தம் துருசு புளியம்பூ இவையெல்லாமோர்நிறையாய் எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துக் கபிறுசெய்து மேற்படிசாற்றிலுரைத்துப்போடச் சகலகண்ரோகங்களுந்தீரும்

கண்ரோகங்களுக்குப்பொடி

வெங்காரம் விராகனிடை-௧-துத்தம் விராகனிடை-௨- சீனிக்காரம் விராகனிடை-௫- முட்டைத்தோல்விராகனிடை-௪- பலகறை-௮- இவைகளையெலுமிச்சம்பழச்சாற்றிலும் சிறுகீரைச்சாற்றிலுமைப்போலரைத்துருட்டிக்காயவைத்து ஷை-வோயனாததுக்கவசஞ்செய்து சட்டியில்வைத்தெரித்துப் பஸ்பித்துப்பொடித்துக்கொண்டு எடபிரமாணங்கண்ணிற்போட ஆணி பூ நீர்க்குமிழி குந்தம் சதைவளர்த்தி பற்பரோகம் அதிமாங்கிஷிவளர்த்தி உருத்தல் பில்லம் உத்துங்கம் நீர்ப்பாய்ச்சல் சூடுவளர்த்தி அமரந்தீரும்.

ஓரிலைத்தாமரைவேர் பொன்னாங்காணிவேர் துத்தம் துருசு பவளம் முத்து தலையோடு சங்கு இவைகளைச்சமமாயெலுமிச்சம்பழச்சாற்றிலரைத்து வில்லைதட்டிக்காயவைத்து ஓட்டில்வைத்துமூடிச்சீலைமண்செய்து புளியம்பொருக்கிற்புடம்போட்டெடுத்துப்பொடித்து எட்பிரமாணங்கண்ணிற்றாவிவர பற்பரோகம் பூ படலம் விரணம் சுக்கிரன் நீங்கும்.

துருசு சங்குப்பொடி தலையோடு பூலாவேர் ஓரிலைத்தாமரைவேர் இவைகளைவகைக்குவிராகனிடை-௨-வீதம் எலுமிச்சம்பழச்சாற்றில் மூன்றுநாளரைத்துவில்லைதட்டிக்காயவைத்து ஓட்டிலிட்டுச்சீலைசெய்துமுன்போற்புடமிட்டுஅதையிருகூறுசெய்துஒருகூறுக்குநாவிலொன்று பீதரோகணியும் ஒருபணவிடைபச்சைக்கர்ப்பூரமுங்கூட்டிப்பொடித்து எட்பிரமாணங்கண்ணிற்றாவிவர பற்பரோகம் நீர்ப்பாய்ச்சல்தீரும். மற்றொரு பங்கைப்பொடித்துக்கொண்டு அரைப்பணவிடை வீதங்கண்ணிற்றாவிவர கண்டடுவன் விழிகண்குருடு தூர்மாங்கிஷிவளர்த்தி நீர்முட்டல் தில்லை நேத்திரவாயுபித்தகாசம் பதகிரி செவவோர் பூ பொன்மணி மந்தாரகாசம் இரத்தப்படலம் அடியினுற்சம்பவிக்குங்கண்கலக்கந்தீரும்.

சீனம் கல்நார் வெள்ளைக்கற்கண்டு துருசு வகைக்குவிராகனிடை-க- வெந்ததலையோடு விராகனிடை-உ- இவைகளைமயனமாய்ப்பொடித்துக்கொண்டு நெல்லிடைகண்ணிற்றூவிவரபடலம்காசம்பூ முதலானசகலகண்ரோகங்களுந்தீரும்.

சந்தனம் துத்தம் துருசு தாரம் பீதரோகணி பச்சைக்கர்ப்பூரம் இவைகளையோர்நிறையாய்மைப்போற்பொடித்து எட்பிரமாணங்கண்ணிற்றூவச்சகலரோகங்களுந்தீரும்.

மஞ்சள் சந்தனம்துத்தம் துருசுபச்சைக்கர்ப்பூரம் மனோசிலை இந்துப்பு வெப்பாலைவேர் பீதரோகணி வெள்ளைலோத்திரம் இவைகளையோர்நிறையாய் எலுமிச்சம்பழச்சாற்றில் மூன்றுநாளரைத்துலர்த்திப்பொடித்து எட்பிரமாணங்கண்ணிற்றூவிவரசகலகண்ரோகங்களுந்தீரும்.

கண்ரோகங்களுக்குக்குழம்பு

குருணிச்செவ்விளநீரில் பொன்னாங்காணி சிறுகீரைஇவைகளின்வேர் திரிபலை வகைக்குப்பலம் -க- சந்தனம் கோஷ்டம் லவங்கம் மரமஞ்சள் ஏலம் மதுரம் சீரகம் தேவதாரம் சண்பகப்பூசெங்கழுநீர்க்கிழங்கு தாமரைவளையம் லாமிச்சம்வேர் வெட்டிவேர் வகைக்குப்பலம்-௩- இவைகளைப்பொடித்துப்போட்டுக்குழம்பாய்காய்ச்சிவடித்துச்கலவத்திட்டு அதில் துத்தம் கடல்நுரை அஞ்சனக்கல் பீதரோகணி சீனிக்காரம் வகைக்குக்கழஞ்சு-இ- பொடித்துமைப்போலரைத்துலர்த்திப் பின்புபச்சைக்கர்ப்பூரம்ஒருபணவிடைகூட்டித்தேன்விட்டுக்குழம்புபோலரைத்துக்கொண்டு கண்ணில் திட்டிவர நீர்ப்பாய்ச்சல் புகைச்சல் பில்லம் பற்பரோகம் படலம் வாதகாசம் பயித்தியகாசம் கண்பிரிதல் தீரும்.

துத்தம் துருசு வெங்காரம் மிளகு இந்துப்பு திப்பிலி சுக்கு பச்சைக்கர்ப்பூரம் வகைக்குக்கழஞ்சு-க- இவைகளைப்பொடித்துத்தேனும் வெண்ணெயுங்கூட்டிக்குழப்புபோலரைத்துக்கண்ணில்திட்டிவரவரணசுக்கிரன் காசம் படலம் பூளைத்தினவு சொரி அன்னகோபம் அழிகண் அமரம் திமிர் நீர்ப்பாய்ச்சல்தீரும்.

கண்ரோகங்களுக்குமை

பீதரோகணி மனோசிலை வகைக்கொரு கழஞ்சுவீதம் ஆவினெய்யிலும்பாலிலுமரைத்துப்புதுச்சட்டிக்குள்ளிலப்பிவிளக்கில்

நெ[illegible]டுத்தீபமேற்றிமை[illegible]பற்றவைத்து அதற்குநிகர் துணிசுட்
டகரிச்சேர்த்து வெண்ணெயிலமைத்துக் கண்ணில திட்டச்சகல
கண்ரோகங்கள்தீரும்.

வேம்பு புளி வேப்பூலா முருக்குதேட்கொடுக்கு கையாந்தக
ரை வெள்ளைச்சாரணை சங்கு இவைகளின்சாறுகளையோரளவாய்
க்கலந்ததிற்றுணியை -௬- -௭-தபா நனைத்துலர்த்தித்திரித்து விள
க்கிலிட்டு நல்லெண்ணெய்விட்டு த்தீபமேற்றிப்புதுச்சட்டித்தா
ரில் ஷெ சாறுகளைப்பூசி மைப்பற்றவைத்து அதற்குநிகர் துத்தம்
அஞ்சனக்கல் புளியம்பூ கடுக்காயரிசி மதுரம் இந்துப்பு இரும்
புப்பொடியுங்கூட்டி ஆவின்வெண்ணெயாலரைத்துக்கொண்டு
கண்ணிற்றீட்டிவர அழிகண் பில்லம் கடுப்பு நீர்வடிதல் படல
ந்தீரும்.

வேம்பு விளா உப்பிலி கையாந்தகரை தேட்கொடுக்கு சங்
கு இவைகளினிலைச்சாறுகளை ஓரளவாய்க்கலந்து முன்போற்சிலைபி
லூட்டி மைப்பற்றவைத்து அதற்குநிகர் துத்தம துருசு வெங்க
லப்பொடி திப்பிலி இந்துப்புகூட்டி யெலுமிச்ச[illegible]பழச்சாற்றி
லரைத்துலர்த்திப்பின்பு ஆவின்வெண்ணெய்கூட்டியரைத்துக்கொ
ண்டு கண்ணிற்றீட்டிவரக் கண்செகப்பு படலம் எழுச்சி கண்பிரி
சல் [illegible]ழவெட்டு புகைச்சல்இமைத்தடிப்பு நீர்முட்டல்தீரும்

சிறுகீரை பொன்னாங்காணி வேலிப்பருத்தி கரிப்பான் மூவி
லைமின்னி பாடாவரை துளசி தூதுளை புளியாரை விஷ்ணுகாந்தி இ
வைகளின்சாறுகளைப்புதுச்சட்டித்தாரில் பத்துதபா வுலரவுலரப்பூ
சி ஷெ சாறுகளில் துணியைநனைத்துலர்த்தித்திரித்து நெய்விட்டு
த்திபமேற்றிச்சட்டித்தாரில்மைப்பற்றவைத்துத்துத்தம் துருசு கு
ன்றிப்பிரமாணங்கூட்டி ஆவின்வெண்ணெயாலரைத்துக்கொண்
டு கண்ணிற்றீட்டிவரச்சகல கண்ரோகங்களுந்தீரும்.

பொன்னாங்காணி சிறுகீரை கரிப்பான் பொடுதலை குப்பை
மேனி உளமத்து முருக்கு அகத்தி புளி கிழ்க்காய்நெல்லி வேம்பு
எருக்கிலைப்பழுப்பு நாயுருவி வேலிப்பருத்தி துளசி இவைகளின்
சாறுகளை முன்போற்சட்டித்தாரிலும் சீலையிலும் ஊட்டித்திரி
த்து நல்லெண்ணெய்விட்டுத் தீபமேற்றி மைபற்றவைத்துத் து
த்தம் துருசு சீனிக்காரம் வகைக்குவிராகனிடை -க- கூட்டிபொ
ன்முசுட்டை சென்னயுரிவி எலுமிச்சம்பழம் இவைகளின்சாற்றி

லரைத்துலர்த்தி வெண்ணெய்சேர்த்தரைத்துக் கோலிட்டுக் கண்ணி
லிட்டுவரச் சகலகண்ரோகங்களுந்தீரும்

கண்ரோகங்களுக்குக் கண்ணிற்கட்டநெய்

ஆவினெய் பால் வகைக்குப்படி-க-ஒன்றாய்க்கலந்ததில் மூடக்கொத்தான் சந்தனம் பூமிசக்கரைக்கிழங்கு செங்கழுநீர்க்கிழங்கு அதிமதுரம் அலரிவேர் தாமரைக்கிழங்கு வகைக்குஒருஎலுமிச்சங்காய்ப்பிரமாணம் அரைத்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்துக்கண்ணிற்கட்டிவர நீலகாசம் கண்வலிவரணம்படலந்தீரும்

நந்தியாவட்டப்பூ முருங்கைப்பூ பனைமட்டை பொன்னாங்காணி சிறுகீரை பச்சைமஞ்சள் எலுமிச்சம்பழம்இவைகளின்சாறு கிளிஞ்சிநீர்வகைக்குப்படி-வ- ஆவினெய்படி-இ- இவைகளை ஒன்றாய்க் கலந்ததில் அதிமதுரம் கோஷ்டம் ஏலம் லவங்கம் சண்பகப்பூ வகைக்குக்கழஞ்சு -உ-அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்துமூன்றுதுளிவீதங் கண்ணிற்கட்டிவரப் பூ இரத்தப்படுவன் சலதவளர்த்தி தீரும்

ஆவினெய்யில் பனமட்டை மரட்கிழங்கு இவைகளின்சாறு கிளிஞ்சிநீர் வகைக்குப்படி-க- ஒன்றாய்க் கலந்ததில் அதிமதுரம் பலம்-க- ஆவின்பால் விட்டரைத்துப்போட்டுக்காய்ச்சி வடித்துக் கண்ணிற்கட்டிவரக் கண்வேக்காடு ரணம் சுக்கிரன் கண்ணுயின்பேரிற்கண்ட வெள்ளைவாங்கும்

ஆவினெய் மூலைப்பால் வகைக்குப்படி-ஹ-கலந்ததில் அதிமதுரம் பொன்னாங்காணிவேர் சிறுகீரைவேர் வகைக்குஒருகழஞ்சு அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்துக் கண்ணிலிட்டுவரக்கண்ணெரிவுமாறிக் கண்குளிரும்

நற்சீரகம் ஏலம் திப்பிலி முத்து பவளம் அதிமதுரம் அதிப்பிஞ்சு பரித்திப்பிஞ்சு இவைகளை ஓர்நிரையாய் அரைத்து ஆவினெய்யிற்போட்டுக் காய்ச்சிமூன்றுநாட்கண்ணிற் கட்டி அப்பால் நெல்லிப்பருப்பை மூலைப்பாலிலரைத்துப் புறவளையமிட்டுக் கண்விதனம் மாறும்

கிளிஞ்சிநீர் பனைமட்டைச்சாறு இளநீர் வகைக்குப்படி மாகாணி ஆவின்பால் நெய் வகைக்குப்படிமூன்றுமாகாணி ஒன்றாய்ச்கலந்ததிற் குங்குமப்பூ தாமரைக்கிழங்கு சந்தனம் வகைக்குப்பணவிடை -உ- செங்கழுநீர்க்கிழங்கு பணவிடை-க-நற்சீரகம்ப

ணவிலட-வ றூ-அதிமதுரம் கோரோசனை வகைக்குப்பணவி டை-வ-இவைகளையரைத்துப்போட்டுக்காய்ச்சி வடித்துக்கண்ணி ற்கட்டிறூலும்ஆவினெய்யும்பாலும்வகைக்குபடி-க-ஒன்றூப்க்கல ந்ததிற் சிறுகீரைவேர்மதுரம்செஞ்சந்தனம்நெய்தற்கிழங்குதாம ரைக்கிழங்குஇவைகள்வகைக்குப்பலம்-க- அரைத்துப்போட்டுக்கா ய்ச்சிவடித்துக் கண்ணிற்கட்டிறூலும் கண்சிவப்பு கடுப்பு காந்தல் முதலானரோகங்கள்தீரும்.

ஆவின்பால் நெய் முருங்கைப்பூச்சாறு உத்தமதாளிச்சாறு வகைக்குப்படி-வ-மஞ்சள் மதுரம் சந்தனம் சிரகம் ஏலம்இவை களைஅரைத்துப்போட்டுக்காய்ச்சி வடித்துக்கண்ணிற்கட்டிவாச்சு க்கிரன்தீரும்.

முடக்கொத்தான் சமூலமும் ஆவின்பால் விட்டிடித்துப் பிழிந்தசாறுபடி -க- நெய்படி -வ- ஒன்றூப்க்கலந்ததில் அதி மதுரம்பலம்-க- அரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்துக்கண்ணி ற்கட்டிவர படலகாசம் திமிர் அத்திகோபந்தீரும்.

இளநீர் ஆவினெய் வகைக்குப்படி-வ-ஒன்றூய்க்கலந்ததில் ந ன்னாரி இருவேலி நெய்தற்கிழங்கு சந்தனம் மஞ்சிட்டி வகைக் குவிர[illegible]கன் க அரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்துக் கண்ணிற்க ட்டிறூலும் முருங்கைப்பூ பசுமஞ்சள் எலுமிச்சம்பழம் பனைம ட்டை கோவையிலை யிலைவகளின்சாறு சிப்பிநீர் வகைக்குப்படி ஞு ஆவினெய்படி இ ஒன்றூய்க்கலந்ததிற் சிறுகீரைவேர் பொ ன்னாங்காணிவேர் நந்தியாவட்டப்பூ இவைகளையொருகொட்டை ப்பாக்களவு அரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்துக் கண்ணிற்கட் டிவரக் கண்ணிற்புண் சீவடிதல் மாறும்.

கண்ரோகமுடையவர்கட்குதலைக்குப்பதமிடகுங்குமப்பூத்தயிலம்

குங்குமப்பூ மஞ்சிட்டி சந்தனம் அரத்தை வெட்டிவேர்லா மிச்சம்வேர் ஆலமுகிழ் மதுரம் தாமரைக்கிழங்கு நீர்வள்ளிக்கி ழங்கு பச்சைவகைக்குப்பலம்-உ இவைகளையிடித்து -அ-படித ண்ணீரிற்போட்டு ஒருபடியாய்வற்றவைத்திறுத்து அதில் நல்லெ ண்ணெய்படி ஒன்றூகூடவிட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்துத்த லைக்குப்பதமிட்டுவரநன்மையைத்தரும்.

கண்ரோகமுடையவர்களுக்[illegible] காலீற் [illegible] கத்தயிலம்

சிலந்திச்சாறு நல்லெண்ணெய்வகைக்குப்படி-க- ஒன்றூய்க்

சலந்ததில் நாயிக்கிழங்குவிராகனிடை-க-சிலதத்துப்போட்டுக்கா விற்றேய்த்துவர நன்மையுண்டாம்.

கண்ணில்வியாதிவராதிருப்பதற்கும் குளிர்ச்சிக் கும்மெவணணெய்

சிற்றுமணர்கின்வேரையரைத்து ஆவின்பாலிற்கலக்கிக்காய்ச்சிப்பிரை குத்திக்கடைந்து வெண்ணெயெடுத்துக்கண்ணிற்றீட்டிவருவது நன்மையாம்.

கண்ணுக்கு மருந்தரைக்கும்பாத்திரம்

வெங்கலக்கலவமாயும் செப்புக்குழவியுமாயுமிருக்கவேண்டும்

மேற்காட்டிய கண்ரோகமருந்துகளனைத்தும் இக்கலவத்திலரைக்கவேணுமேயல்லாது மற்றொன்றிலரைக்கலாகாது

காலையிற்போடவேண்டியமருந்தை இரவிலும் மாலையிற்போடவேண்டியமருந்தைகாலையிலும் அதற்குரிய அனுப்பானங்களில் வெள்ளிக்கிண்ணத்திலரைத்து வைத்துக்கண்ணிற்றீட்ட.

கண்ணில் மருந்திடப்பொருந்தாக் காலம்

நேத்ரரோகஸ்தர்கள்நெடுந்தூரவெய்யிலில் நடந்துவந்திருக்கும்போதும் லாகிரிவஸ்துக்களைபுசித்திருக்கும்போதும் தைலஞ்செய்துகொண்டதினத்திலும் கண்வலித்ததினத்திலும் கண்ணில்மருந்திடலாகாது.

கண்ணில்மருந்தெழுதியபின் நடக்கவேண்டியகிரமம்

காற்று வெயில் லாகிரிவஸ்துக்கள் குளிர்ந்ததண்ணீர் கைப்பு புளிப்பு கரப்பன்பதார்த்தம் நீக்கி வெந்நீர் ஆவின்பால்நெய் துவரை பாசிப்பயறு சிறுகீரை பொன்னாங்காணி முருங்கைக்கீரை வாழைக்கச்சல் இவைகளையனுசரித்துவந்தால்நன்மையுண்டாம்.

தந்தசுத்தி

ஆலவிழுது பூலா நாயுருவி-வெள்ளெருக்கு உகா இவைகளின்வேர் வேம்பு இக்குச்சிகளிலொன்றினல் தந்தசுத்திசெய்து வெந்நீரில் முகங்கழுவிவந்தால்நன்று.

தயிலந்தேய்த்துக்கொள்ளுங்கிரமம்

சித்திரை வைகாசிஆனி ஆடி ஆவணியில் ஒருகடிகைவரையிலும் மார்கழி தையில்-உ-கடிகைவரையிலும்மாசி பங்குனி மற்றமாதங்களில்-ரு,கடிகை வரையிலுஞ்சிரசிற்றயிலமூறினபின்வெந்நீரில் ஊறிலசீயக்காய்முதலான அரப்பிட்டுஸ்நானஞ்செய்வது கிரமம்

### கண்ரோகங்களுக்குத்தயிலம்

சிறுகீரைபொன்னாங்காணி எலுமிச்சு நன்னாரி நந்தியாவட்டம் வாதமடக்கி சங்கங்குப்பி முடக்கொத்தான் பொன்முசுட்டை நொச்சி கருத்தாக்கண்ணன் அமுக்குரு சீந்தி வெட்டிவேர் லாமிச்சவேர் தாமரை நெய்தல் கரந்தை சவுரி பேராமுட்டி ஆல் பேய்ப்பீர்க்கு இவைகளின்வேர் அதிமதுரம் தேவதாரம் தான்றிக்காய் முத்தக்காசு வகைக்குப்பலம்-௫- சந்தனம் பலம்-அ- சிற்றாமுட்டிவேர் பலம்-௰௫- மிளகுபலம்-௫-இவைகளை இடித்து-௫௨-படி சுத்தசெலத்திற் போட்டு தீபம்போலெரித்து எட்டொன்றாய்வற்றவைத்துவடித்து அதில் நல்லெண்ணெய்படி-௬- ஆவின்பால்படி-௪-ஷை நெய்படி-௨- செவ்விளநீர்படி-௧-முடக்கொத்தான் பொன்முசுட்டை நொச்சி பொன்னாங்காணி கரிசாலாங்கண்ணி சீந்தித்தண்டு கற்றாழை தண்ணீர்விட்டான் வாதமடக்கி இவ்வகைகளின் சாறுவகைக்குப்படி-௩- ஒன்றாய்விட்டு நாகணம் பூலாங்கிழங்கு லவங்கப்பத்திரி சந்தனம் தேவதாரம் மந்திஷ்டி வேர் வால்மிளகு சடாமாஞ்சி ஏலம் சாதிக்காய் கிராம்பு கோஷ்டம் வெட்டிவேர் அஞ்சனக்கல் லாமிச்சம்வேர் மரமஞ்சள் கொத்தமல்லி குக்கில் அதிமதுரம் செவியம் சண்பகப்பூ லவங்கப்பட்டை தக்கோலம் சதகுப்பை நெல்லிமுள்ளி திப்பிலி கடுகுரோகணி சிறுநாகப்பூ தேசாவரப்பச்சை வகைக்குக் கழஞ்சு-௫- ஆவின்பாலிலரைத்துப்போட்டுச்சிறுதியாய் எரித்துமெழுகுபதத்தில் வடித்து அதிற்சூடாறுமுன் அபின் புனுகு சவுக்காரம் கோரோசனை கஸ்தூரி பச்சைக்கர்ப்பூரம் வகைக்குக் கழஞ்சுபொடித்துப்போட்டு வைத்துக்கொண்டு ஒன்றைவிட்டொருநாள் தயிலந்தேய்த்துசீயக்காய் அரைப்பிட்டு முழுகிவர நயனகாசம் படலம் பில்லம் திமிர் புழுவெட்டுபித்தம் பூ குருடு நீர்ப்பாய்ச்சல் குத்தம் முதலாகிய கண்நோய்-௯௬- ம் தீரும்

நெல்லிக்காய் கையாந்தகரை இவைகளின்சாறு பசுவின்பால் வகைக்குப்படி-௫- நல்லெண்ணெய்படி -௪- அதிமதுரம் கோஷ்டம் ஏலம் இலவங்கம் சண்பகப்பூ சந்தனம் வெட்டிவேர் லாமிச்சம்வேர் வகைக்குப்பலம் -௧-அரைத்துப்போட்டு காய்ச்சிமுழுகிவர கண்காசப்படலம் புகைச்சல் பித்தம் தீரும்.

நெல்லிக்காய் கையாந்தகரை வகைக்குச்சாறுபடி -உ- நல்லெண்ணெய் ஆவின்பால் வகைக்குப்படி-க- இவைகளை ஒன்றாய்க் கலந்ததில் அதிமதுரம்பலம்-க- அரைத்துப்போட்டுக் காய்ச்சி முழுககண்படலம் காசம் கண்ணெரிவுகபாலவரகஷீதீரும்.

நல்லெண்ணெய் கருஞ்செம்பையிலைச்சாறு வகைக்குப்படி -க- முலைப்பால்படி-இ-ஒன்றாய்க் கலந்ததில் மிளகுபலம்-க- வால்மிளகுபலம்-இ- பூடு வசம்புவகைக்குப்பலம்-வ-இவைகளை அரைத்துக் கரைத்துக் காய்ச்சி வடித்துமுழுக நேத்திரவாயுதீரும்

கையாந்தகரை பொன்னாங்காணி மொசுமுசுக்கை தாழைவிழுது இவைகளின்சாறு நல்லெண்ணெய்முலைப்பால் செவ்விளநீர வகைக்குப்படி-க- ஒன்றாய்க்கலந்து மூன்றுநாள்வெயிலில்வைத்து அதில்சந்தனம் மதுரம் லாமிச்சப்வேர் வெட்டிவேர் செங்கழுநீர்க்கிழங்கு கோஷ்டம் வகைக்குக்கழஞ்சு -க- கிராம்புபணவிடை -ரு-குங்குமப்பூபணவிடை -உ- இவைகளை அரைத்துக் கலக்கிக் காய்ச்சி முழுககண்புகைச்சல் பித்தகாசம் தலைமயக்கம் தீரும்

சிறுகீரை [illegible]ப்பான் இவைகளின்சாறு நல்லெண்ணெய் பசுவின்பால் வகைக்குப்படி-க- எலுமிச்சம்பழச்சாறுபடி -இ- ஒன்றாய்க்கலந்ததில் கோஷ்டம் நெல்விமுள்ளி அதிமதுரம் ஏலம் லவங்கம் வெட்டிவேர் லாமிச்சம்வேர் வகைக்குவிராகனிடை -க- அரைத்துக் கலக்கிக் காய்ச்சி முழுகபித்தகாசம்மாலைகாசம் வரகஷீதீரும்

சிறுகீரை பொன்னாங்காணி வல்லாரை மொசுமுசுக்கை நெல்லிக்காய் இவைகளின்சாறு நல்லெண்ணெய் ஆவின்பால் இளநீர் வகைக்குப்படி -உ- இவைகளைஒன்றாய்க்கலந்ததில் இஞ்சிபலம் -ரூ-வெட்டிவேர் தண்ணீர்விட்டான்கிழங்கு வகைக்குப்பலம்-க-தாமரைக்கிழங்குபலம் -ரூ-மல்லிபலம்-உ- சீரகம் வாய்விளங்கம் வகைக்குப்பலம்-இ- இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றாலரைத்துக் கலக்கி சூரியனில் இரண்டுநாள்வைத்துக் காய்ச்சிவடித்து அதில் பஞ்சதிரவியம் வகைக்குவிராகனிடை -உ- பொடித்துச்சீலையில் முடிந்து போட்டுக்கொண்டு தலைமுழுகிவரவிழிகண்குருடுநீலகாசம்பித்தகாசம்தீரும்.

வெட்டிவேர் லாமிச்சவேர் முத்தக்காசு நன்னாரிவேர் நெல்விமுள்ளி மரமஞ்சள் சந்தனம் மகிழம்பூ வகைக்குப்பலம் -க-

இவைகளையிடித்துப்பதக்[illegible]த் தண்ணீரிற்போட்டு எட்டொன்று
ய்க்காய்ச்சியதில் பச்சை கர்ப்போலம் நன்னாரி வெட்டிவேர் லா
மிச்சவேர் கோஷ்டம் சந்தனம் இலுப்பைப்பூ சதகுப்பை குங்
குமப்பூ சடாமாஞ்சில் வெள்ளைக்குங்கிலியம் மகரப்பூ புனுகு
நெய்தற்கிழங்கு சாதிக்காய் ஏலம் முத்தக்காசு அகில் விளா
வரிசி தாமரைக்கிழங்கு கடுகு செவியம் தான்றி அஞ்சனக்க
ல் அதிவிடையம் அதிமதுரம் சண்பகப்பூ மஞ்சிட்டி வகை
க்குக்கழஞ்சு -க- இவைகளையரைத்துப்போட்டு நல்லெண்ணெ
ய்படி -க- கூடவிட்டுப்பதமாய்க்காய்ச்சிவடித்து முழுகிவர தலை
மயக்கம் உடம்பெரிவு காமாலை மதிமயக்கம் கண்டுமிர் எரிவு ப
டலம் காசம் இழிகண் பூ சதைவளர்த்தி நீலகாசம் நலாதிரை
நீங்கும்.

சிற்றாமுட்டிவேர் பலம் -௬௰-வில்வவேர் வெட்டிவேர் லாமி
ச்சவேர் நன்னாரிவேர் சீந்தில்த்தண்டு சந்தனம் அமுக்குறாக்கிழங்கு
வகைக்குப்பலம் -௬- இவைகளையிடித்து -௰௬- படி தண்ணீரிற்
போட்டு எட்டொன்றாய்க்கசாயஞ்செய்து அதில் [illegible]றுகீரை கொ
டுப்பை மொசுமுசிக்கை ஓரிலைத்தாமரை தண்ணீர்விட்டான் வ
ல்லாரை சீராசெங்கழுநீர கற்றாழை தாழைவிழுது வகைக்குச்சா
று[illegible] வ நல்லெண்ணெய் ஆவின்பால் இளநீர் நெல்லிக்காய்
ச்சாறு வகைக்குப்படி க கூடவிட்டு பஞ்சதிரவியம் சிறுநாகப்பூ
சீரகம் கஸ்தூரிமஞ்சள் திரிகடுகு திரிபலை சடாமாஞ்சி செவ்வ
ள்ளிக்கொடி வெப்பாலையரிசி வாலுளுவையரிசி பெருங்குரு
ம்பை மல்லி மகரப்பூ தேவதாரம் பச்சை கிளியூரம்பட்டை இச்
சிலிக்கிழங்கு பூஞ்சாந்துப்பட்டை வகைக்குவிராகன் உ இவை
களைப்பசுவின்பாலிலரைத்துக்கலக்கிக்காய்ச்சிவடித்து அதில் புனு
குசட்டம் கோரோசனை பச்சைக்கர்ப்பூரம் குங்குமப்பூ வகைக்கு
விராகன் க பொடித்துப்போட்டுத் தலைமுழுகிவர கண்ரோகம்
௯௰ம் தீரும்

நெல்லிக்காய் மொசுமுசிக்கை இளநீர் கரிசாலாங்கண்ணி
கற்றாழை சிறுகீரை தண்ணீர்விட்டான்கிழங்கு வல்லாரை இவை
களின்சாறுவகைக்குப்படி ச பசுவின்பால் நல்லெண்ணெய் வ
கைக்குப்படி ௰அ சிற்றாமணக்கெண்ணெய்ஆவினெய்வகைக்குப்

படி உ இவைகளை யொன்றாய்ச்சலத்தில் எலம் அதிமதூரம் கோஷ்டம் மஞ்சிட்டி நன்னாரிவேர் லாமிச்சவேர் வெட்டிவேர் லவங்கப்பட்டை லவங்கப்பத்திரி சண்பகப்பூ வகைக்குப்பலங்கால் தாளிசபத்திரி பலம் கஇ சந்தனம்பலம் உ கோரோசனைபலம் வ பச்சைக்கர்ப்பூரம் பலம் ஙு இவைகளை இளநீர்விட்டரைத்துக்கலந்திக்காய்ச்சிவடித்துத்தானியபுடம்வைத்து முழுகிவர உட்சுரம் பித்தம் தினவு கடிவிஷம் கை காலெரிவு திமிர் கண்காசம் படலம் நேத்திரவாயுமுதலானவைகளுந்தீரும்

நெல்லிக்காய்ச்சாறு ஆவின்பால் நல்லெண்ணெய் இளநீர் வகைக்குப்படி உ நன்னாரி சீந்தி முத்தக்காசு சிற்றாமுட்டி பொன்னாங்காணி பேராமுட்டி சீரசெங்கழுநீர் இரும்வலி ஓரிலைந் தாமரை வகைக்குப்பலம் க இவைகளையிடித்துப்பத்துப்படி தண்ணீரிற்போட்டு இரண்டுபடியாய்வற்றவைத்ததில் நற்சீரகம் கருஞ்சீரகம் செஞ்சந்தனம் வசவாசி திரிகடுகு கிராம்பு எலம் மதூரம் லவங்கப்பட்டை சாதிக்காய் கோஷ்டம் வகைக்குக்கழஞ்சு உ அரைத்துப்போட்டு ஒன்றாய்க்கலந்துகாய்ச்சிமுழுக பித்தவரட்சி நாவ[illegible]சி பிரமேகம் அவயவங்களிலெரிவு உஷ்ணம் கண்ணீர்ப்பாய்ச்சல் தலைவலி தீரும்

பத்துப்படிதண்ணீரிற் பத்துப்பல சந்தனத்தூளைப்போட்டு ஐந்து தினமூற வைத்து இரண்டுபடியாய்வற்றவைத்து லாமிச்சவேர் வெட்டிவேர் நன்னாரி பொன்னாங்காணி சிற்றாமுட்டி சீந்தில் வில்வம் இவைகளின்வேர் வகைக்குப்பலம் க இடித்து இருநாழி நீரிற்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து இருவகைக்கஷாயத்தையும் ஒன்றாய்க்கலந்ததில மரமஞ்சள் மஞ்சிட்டி மாஞ்சில் முல்லி செவ்வள்ளிக்கொடி செவியம் விளாவரிசி சதகுப்பை வெட்பாலையரிசி பச்சை திப்பிலி கச்சோலம் தகரம் புனுகு சந்தனம்வகைக்குக்கழஞ்சு ௬ இவைகளையரைத்துப் போட்டுக்காய்ச்சிவடித்து உள்ளுக்குஞ்சாப்பிட்டுந் தலைக்குந்தேய்த்து முழுகிவர மேற்சொல்லியரோகங்கள்தீரும்

தாமரைக்கிழங்கு நெல்லிமுள்ளி ஆம்பற்கிழங்கு செங்கழுநீர்க்கிழங்கு நெய்தற்கிழங்கு வகைக்குப்பலம்-ம- இவைகளையிடித்துலர்த்திப்பத்துப்படி தண்ணீரிற்போட்டு நாலிலொன்றாய்வற்

றவைத்து அதிலொருபடி நல்லெண்ணெய்விட்டுக்காய்ச்சிவடித்து முழுகிவர கணனோய்கள்தீரும்.

நெல்லிக்காய கரிப்பான் தாமரைக்கிழங்கு பொன்னுங்காணி பேய்ப்புடல் கோவையிலை எலுமிச்சம்பழம் இவைகளின்சாறு பசுவின்பால் வகைக்குப்படி-இ-நல்லெண்ணெய்படி-க-அதிமதுரம் தேவதாரம் நாகணம் கோஷ்டம் ஏலம் முந்திரிப்பழம் பேரீத்தம்பழம் சந்தனம் சாதிக்காய் வகைக்குவிராகனிடை-உ-இவைகளையரைத்துக்கலக்கிக் காய்ச்சிவடித்து மூன்றுநாழிகைவரைதலையிற்றேய்த்து உசில் அரப்பிட்டு ஸ்நானஞ்செய்துவர எட்டுவகைகாசமுந்தீரும்

கருவேலம்பட்டை பலம் உம குமரி சீந்திசிற்றாமுட்டி சிறுகீரை பொன்னாங்காணி சீராசெங்கழுநீர் தாமரைக்கிழங்கு நன்னாரி லாமிச்சு சந்தனம் வகைக்குப்பலம்-சு-இவையெல்லாமிடித்துத்தண்ணீரிற்போட்டு எட்டொன்றாய்க்காய்ச்சியதில் நல்லெண்ணெய்ஆவின்பால் வகைக்குப்படி ச இளநீர் படி உ விட்டுக்கலந்து அதிமதுரம் கோஷ்டம் சதகுப்பை சன்னலவங்கப்பட்டை சந்தனம் பச்சைக்கர்ப்பூரம சாதிக்காய் செவ்வள்ளிக்கொடி ஏலம்பச்சை திப்பிலி மூலம் மல்லி அகில்வாலுளுவைசெஞ்சந்தனம் முந்தர்காசு சடாமாஞ்சி கோரோசனை வகைக்குக்கழஞ்சு உ-இவைகளையரைத்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி முழுகிவரநேத்திரநோய்-கூ௬-ம் தலைவலியுந்தீரும்

பேய்வாழை வெள்ளறுகுபிரமி பொன்முசுட்டை பாதிரிநாய்வேளை தகரை நெல்லிமுள்ளி வகைக்குப்பலம்-க-வீதம் இடித்துஎட்டுப்படிதண்ணீரிற்போட்டுவற்றவைத்திறுத்தகசாயம் படி-கு-ஆவினெய்படி-க-ஒன்றாய்க்கலந்ததில் மிளகு திப்பிலி சுக்கு அரத்தை சிறுதேக்கு மலைதாங்கிவேர் மரமஞ்சள் தான்றிக்காய் மதுரம் பூமிசர்க்கரை வகைக்குவிராகனிடை-௬-ஆவின்பாலிலரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்துமுழுகிவர திமிர்காசந்தீரும்.

காத்தட்டி வெற்றிலை பச்சைமஞ்சள் கஞ்சா இவைகளின்சாறுவகைக்குப்படி-வ-ஆவின்பால் நல்லெண்ணெய்வகைக்குப்படி-உ-மிளகு கருஞ்சீரகம் கோஷ்டம் வகைக்குக்கழஞ்சு-க-அரைத்துப்போட்டுக்காய்ச்சி வடித்து முழுகிவர கண்ணில்நீர்வடிதல் பிலலம் பீளிசந்தீரும்.

சிற்றாமணக்கெண்ணெய் குமரிச்சாறு வகைக்குப்படி-௧. தேவதாரம் சந்தனம் பச்சைக்கர்ப்பூரம் சாதிப்பத்திரி அதிமதுரம் கடுகுரோகணி தக்கோலம் மஞ்சள் சாதிக்காய் கிராம்பு ஏலம் புனுகுசட்டம் முத்தக்காசு சடாமாஞ்சி லாமிச்சம்வேர் லவங்கம் மஞ்சிட்டி நன்னாரிவேர் தாமரைக்கிழங்கு செங்கழுநீர்க்கிழங்கு சிறுநாகப்பூ திரிபலை வகைக்குக்கழஞ்சு-உ- ஷை சாற்றிலரைத்துப்போட்டுக்காய்ச்சி முழுகிவர நேத்திரநோய் சிரசுநோய்தீரும்.

கற்றாழஞ்சாறுபடி -உ-இளநீர்படி-௬-நல்லெண்ணெய்படி-௬-பசுவின்பால்படி-௬- இவைகளைக்கலந்து மூன்றுநாள்ரவியில் வைத்துநாலிலொன்றாய்க்காய்ச்சி அதில செங்கழுநீர்க்கிழங்கு ஏலம் லவங்கம் பச்சை சந்தனம் லாமிச்சம்வேர் வெட்டிவேர் இலுப்பைப்பூ கோஷ்டம் வெள்ளைக்குங்கிலியம் சிறுநாகப்பூ நறும்பிசின் மாஞ்சில் அதிமதுரம் அரேணுகம் மரமஞ்சள் தகரம் புன்னைத்தாது தாமரைவளையம் ஞாழல்தாது கொட்டிக்கிழங்கு நன்னாரி முத்தக்காசு வகைக்குக்கழஞ்சு-௬-இவைகளை அரைத்துப்போட்டுப்பதமாய்க்காய்ச்சி வடித்துமுழுகிவர கண்ணழற்சி சிவப்பு நீர்ப்பாய்ச்சல் பற்பரோகங்களுந்தீரும்.

சந்தனத்தூள்பலம்-௬-லாமிச்சம்வேர் வெட்டிவேர் முத்தக்காசு அதிமதுரம் ஏலம் இலவங்கம் இந்துப்பு கார்கோலரிசி அகில் வகைக்குப்பலம்-௧- இவைகளையிடித்துத்தூணி நீரிற்போட்டு நாலிலொன்றாய்வற்றவைத்து அதில் நல்லெண்ணெய்படி-௬- ஆவின்பால்படி-௬-பச்சை கச்சோலம் வெட்டிவேர் லாமிச்சம்வேர் அதிமதுரம் ஏலம் லவங்கம் சிறுநாகப்பூநன்னாரி குங்குமப்பூ மரமஞ்சள் செங்கழுநீர்க் கிழங்கு சணபகப்பூ அகிற்சந்தனம் செவ்வள்ளிக்கொடி கோஷ்டம்வகைக்குக்கழஞ்சு-௬-இவைகளையரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்து அதில்குங்குமப்பூ புனுகு பச்சைக்கர்ப்பூரம்வகைக்குவிராகனிடை-௧- பொடித்துப்போட்டுத்தலைமுழுகிவர பன்னகாசம் படலம் பற்பரோகம் புகைச்சல் நீர்ப்பாய்ச்சல்கூச்சம் தலைநோய் கன்னச்சூலை தீரும்-

ஏலம் லவங்கம் சாதிக்காய் நெல்லி தான்றி கோஷ்டம் கஸ்தூரிமஞ்சள் கருவாய்ப்பட்டை செஞ்சந்தனப்பொடி கடுகுரோகணி சிறுநாகப்பூ அதிமதுரம் கடுக்காய் சதகுப்பை சண்பகப்பூ ப

ச்சை வெள்ளைக்குங்கிலியம் குருந்தொட்டிவேர் வகைக்குப்பலம் ரு இவையெல்லாமிடித்து உச படிதண்ணீரிற்போட்டெட்டொன்றாய்வற்றவைத்துவடித்து அதில் பொன்னாங்காணிவேர் வெட்டிவேர் லாமிச்சம்வேர் மிளகு வகைக்குப்பலம் ரு இவைகளையிடித்துத்தனித்தனி ச படிதண்ணீரிற்போட்டு எட்டொன்றாய்வற்றவைத்துவடித்துவிட்டு இளநீர் தாழைவிழுதுச்சாறுவகைக்குப்படி-உ- நல்லெண்ணெய் ஆவின்பால்வகைக்குப்படி ரு ஒன்றாய்க்கலந்து மேற்படி -ச-வகைமருந்தும் வகைக்குப்பலம் -உ-ஷ பால்விட்டரைத்துப்போட்டுக்காய்ச்சி வடித்து முழுகிவர கண்ணீர்ப்பாய்ச்சல் இமைத்தடிப்பு பற்பரோகமுதலானகண்ணோய்கள்தீரும்.

நல்லெண்ணெய் இளநீர் ஆவின்பால் வகைக்குப்படி-க- சிறுகீரை கையாந்தகரை பொன்னாங்காணி நெல்லிக்காய் இவைகளின்சாறுவகைக்குப்படி-இ- வெப்பாலையரிசி கஸ்தூரிமஞ்சள் பஞ்சதிரவியம் வகைக்குப்பலம் -இ- இவைகளையரைத்துக் கலக்கிக்காய்ச்சிமுழுகிவர கண்ணெரிவு கடுப்பு காசம்தீரும்.

அவயவங்களினெரிவு பித்தத்திற்குத்தயிலம்

சிற்றாமுட்டி நன்னாரி இருவேலி முன்னை நெய்தல் இவைகளின்வேர் சீந்தித்தண்டு சிராசெங்கழுநீர் தாமரைக்கிழங்கு தண்ணீர்விட்டான் சிறுகீரைவேர் வகைக்குப்பலம் -க- இவைகளையிடித்து எட்டுமரக்கால் தண்ணீரிற்போட்டெட்டொன்றாய்க் காய்ச்சிவடித்துஅதில் தாழைவிழுது தாமரைக்கிழங்கு பொன்னாங்காணிகையாந்தகரை ஒரிலைத்தாமரை நெல்லிக்காய் எலுமிச்சம்பழம்இவைகளின்சாறு வகைக்குப்படி-உ- நல்லெண்ணெய் பால் வகைக்குப்படி-ரு-இவைகளையெல்லாம் ஒன்றாய்க்கலந்து அதில் பஞ்சதிரவியம் பச்சை கஸ்தூரிமஞ்சள் சிறுநாகப்பூ செவியம் சடாமாஞ்சிவகைக்குப்பலம் -க-இவைகளை இளநீர்விட்டரைத்துப் போட்டுப்பதமாய்க்காய்ச்சிவடித்து அதில் புனுகும் பச்சைக்கர்ப்பூரமும் பொடித்துப்போட்டுவைத்துக்கொண்டுதலைமுழுகிவரத்தீரும்.

கண்கடுப்பு சிவப்புத்தலைவலிக்குத்தயிலம்

நல்லெண்ணெய்படி-க- குப்பைமேனி கையாந்தகரை ஆதி

ண்டை தொச்சி கழற்கொடி இவைகளின்சாறு வகைக்குப்படி-க- பின் னுங்கையாந்தகரைச்சாற்றில்சர்க்கரையைக்கரைத்து வெயிலில் தெளியவைத்து அந்தத்தெளிவுபடி-வ- ஒன்றாய்க்கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்து அதில் அபின் வீரகனிவகை-க-பொடித்துப்போ ட்டுக்கொண்டுதலைமுழுகிவரத்தீரும்.

கண்ரோகங்களுக்கும் கபாலகுஷ்டத்திற்கும் குமரித்தயிலம்

எட்டுப்படி குமரிச்சாற்றை ஒருபாண்டத்திலூற்றி ஒருப டியாய்வற்றவைத்து அதில் நல்லெண்ணெய்படி-க- சிறுநாகப்பூ செங்கழுநீர்க்கிழங்கு அதிமதுரம் லாமிச்சம்வேர் நன்னாரிவேர் அ ஞ்சனக்கல் சந்தனம் வகைக்குககழஞ்சு-ரு-ஆவின்பால விட்டரை த்துப்போட்டுக்காய்ச்சி முழுகிவரத்திரும்.

கபாலவலி கபாலசன்னி கண்ணோய்கட்கு சமபிரத்தயிலம்

தேங்காய்ப்பால் பசுவின்பால் வகைக்குப்படி-உ-எலுமிச்ச ம்பழச்சாறு முலைப்பால்வகைக்குப்படி-ரு- ஒன்றாய்க்கலந்ததில் ஏலம் லவங்கம் நற்சிரகம் சுக்கு கோஷ்டம் சண்பகப்பூ வகைக்கு ககழஞ்சு-க- அரத்தை மிளகு மதுரம் சதகுப்பை மயிர்மாசனை குருந்து ஈசுரமூலி முட்புரமெரித்தான் பெருங்குரும்பைவகை க்குககழஞ்சு-உ- இவைகளையரைத்துப்போட்டு உமிக்காந்தலில மூன்றுநாள்வைத்திருந்து காய்ச்சிமுழுகிவரத்திரும்.

கண்ணோய் செவிநோய் தலைநோய்கட்குத்தயிலம்

கையாந்தகரை கற்றாழை நெல்லிக்காய் இவைகளின்சாறு முலைப்பால் வகைக்குப்படி-க- நல்லெண்ணெய்படி-க இ- நன்னா ரிவேர் வெட்டிவேர் லாமிச்சம்வேர் கோஷ்டம் மதுரம் சந்தனம வகைக்குப்பலம் -இ- இவைகளை அரைத்துப் போட்டுக்காய்ச்சி வ டித்துமுழுகிவரத்திரும்.

கண்ணோய்சிரசுநோய்க்கு கர்ப்பூரசந்தனாதித்தயிலம்

நல்லெண்ணெய்பசுவின்பால்இளநீர்கற்றாழைதாழைவிழுது மொ சுமுசுக்கைகற்பூரவல்லி எலுமிச்சம்பழம் இவைகளின்சாறுவகைக்குப் படி-க- லாமிச்சம்வேர்வெட்டிவேர் ஏலம்ஓமம்குங்குமப்பூகிராம்பு சீரகம்மல்லிதேவதாரம்அரத்தைமரமஞ்சள்கிளியூரம்பட்டைதான் றிக்காய் கற்கடகசிங்கி சிறுநாகப்பூ சண்பகப்பூ கஸ்தூரிமஞ்ச ள் மஞ்சள் வெப்பாலையரிசி விளாவரிசி சிறுதேக்குபூலாங்கிழங்கு

பச்சை வாலுளுவையரிசி மிளகு வகைக்குக்கழஞ்சு-க-இவைகளையெல்லாம்எலுமிச்சஞ்சாற்றாலரைத்துப்போட்டுக்காய்ச்சிமுழுகிவரமூக்கில் நீர்ப்பாய்ச்சல் சீவடிதல்நாசிகனத்துமண்டையைக்குத்துதல் ஒருத்தலைவலி கபால இடி முதலானசிரசுநோய் சயம்கண்ணோய்-கூ௧- ம்தீரும்.

பித்தம் கண்காசம் காதடைப்பு மந்தத்திற்குத்தயிலம்

கையாந்தகரை நெல்லிக்காய் நொச்சி ஆதண்டை இவைகளின்சாறு நல்லெண்ணெய் பசுவின்பால் வகைக்குப்படி-க வ- அதிமதுரம் கழஞ்சு-உ-அரைத்துப் போட்டுக்காய்ச்சி முழுகிவரத்தீரும்.

நேத்திரநோய்தொண்ணூற்றுக்குத்தயிலம்

பொன்னாங்காணி சிறுகீரை ஆவரைமொட்டு கொழுந்து இவைகளை ஆவின்பால்விட்டு இடித்துப்பிழிந்தசாறு சிற்றாமணக்கெண்ணெய் ஆவிணெய் நல்லெண்ணெய் வகைக்குப்படி-க-ஆவின்பால்படி-௫-ஒன்றாய்க்கலந்து அதில் ஏலம் கிராம்பு அதிமதுரம்கோஷ்டம் சண்பகப்பூ சாதிக்காய் மிளகு வால்மிளகு மிலாக்காய்ச்சந்தனம் செஞ்சந்தனம் மரமஞ்சள் அரத்தை தேவதாரம் சாத்திரவேதி வெட்டிவேர் வகைக்குப்பலம் -௬- பொடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்து ஒன்றைவிட்டொரு நாள்தலைக்குத்தேய்த்துச்சீயக்காய் உசிலிலைஅரப்பிட்டு ஸ்நானஞ்செய்துவரசகலகண்ரோகங்களுந்தீரும்.

கண்நோய்சிரசுநோய்க்குத்தயிலம்

தாழைவிழுதுச்சாறு நெல்லிக்காய்ச்சாறு கரிசாலாங்கண்ணிச்சாறு சீந்திச்சாறு வகைக்குப்படி-அ- நல்லெண்ணெய்படி-௰-இவைகளையொன்றாய்க்கலந்ததில்இலுப்பைப்பூ சந்தனம்அதிமதுரம் ஏலம் லவங்கம் லவங்கப்பத்திரி நாகேசரம் வெட்டிவேர் முத்தக்காசு சாதிக்காய் பேரீத்தம்பழம் கொத்தமல்லி தேவதாரம் லாமிச்சம்வேர் தாமரைக்கிழங்கு செங்கழுநீர்க்கிழங்கு ஆலவிழுது வில்வம் கீழ்க்காய்நெல்லிவேர் மல்லி வகைப்பலம்-க-இவையெல்லாம் இடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து முழுகிவரத்தீரும்.

நயனவிதிமுற்றிற்று

———*———

# பீனிசம்

வாதபீனிசம் பித்தபீனிசம் சிலெத்மபீனிசம் நீர்ப்பீனிசம் இரத்தப்பீனிசம் சீப்பீனிசம் சிருப்பீனிசம் மூலப்பீனிசம் கண்டப்பீனிசம் ஆகப்பீனிசங்கள் எட்டு.

பீனிசப்பொதுக்குணம்

மூலத்திற்கனலேறி கபாலத்தில்நீராயேற்றி ஒருநாசியடைத்து ஒருநாசியில்நீர்வடியும் அடிக்கடிதும்மல்விழும் பிடரியுந்தலையுங்கனத்துவலிக்கும் வாரந்தோறும் கபாலம்வரண்டு நீர்திரண்டுவிழும் நாறும் தேகத்தில்வெதுப்புக்காணும் நாவில்ருசியும் நாசியில்மணமும்கெடும் சிரசுநீர்நெஞ்சிலிறங்கிக்கட்டும்.

வாதபீனிசக்குணம்

நாசிவரளும் நீர்வடியும் நீர்பழுத்து சளிபோல்திரண்டு நற்றமின்றி விழும்

பித்தபீனிசக்குணம்

நாசிவழி மஞ்சள்நிறமாய்ச்சளிவடியும் புலால்நாறும்

சிலேத்மபீனிசக்குணம்

நாசிமாறிமாறி அடைத்து முத்துப்போல் நீர்வடிந்துநாறும் துணுக்குப்போற்சளிவிழும் நாசியில்ஊசிபோற்குத்தும் கண்ணிற்பீளைசாடும்

நீர்ப்பீனிசக்குணம்

விஷபித்தமும் வெட்டையும் அதிகரித்துச் சிரசிலேறி நாசிவழி நீர்வடிந்துகொண்டிருக்கும் பனிவாடை மழையிற்றோய்ந்தால் நீர்மிகுந்து பிடரியும் முகமும் பரபரத்துஊறும் நாசியரிக்கும் அடிக்கடி தும்மல்விழும் தலைகனத்துவலிக்கும்

இரத்தபீனிசக்குணம்

வெட்டையின்பேரிற் பித்தமிஞ்சி கபாலத்திலேறி அதில்வட்டமாய்ப் புண்ணாகி நாசிவழிஇரத்தம்விழும் தலைவலிக்கும்

சீப்பீனிசக்குணம்

வெட்டையும் பித்தமும் கபாலத்தில் அதிகரித்து கபாலமுதல்நாசிவரை புண்ணாகிச்சீய்வடியும் தலைவலிக்கும்

சிருய்ப்பீனிசக்குணம்

நாசிவழி சிருய்போலும் ஈருள்ளிக்கூடுபோலும் சீய்திரண்

# பீனிசம்

வாதபீனிசம் பித்தபீனிசம் சிலேத்மபீனிசம் நீர்ப்பீனிசம் இரத்தப்பீனிசம் சீப்பீனிசம் சிறுப்பீனிசம் மூலப்பீனிசம் கண்டப்பீனிசம் ஆகப்பீனிசங்கள் எட்டு.

## பீனிசப்பொதுக்குணம்

மூலத்திற்கனலேறி கபாலத்தில்நீரையேற்றி ஒருநாசியடைத்து ஒருநாசியில்நீர்வடியும் அடிக்கடிதும்மல்விழும் பிடரியுந்தலையுங்கனத்துவலிக்கும் வாரந்தோறும் கபாலம்வரண்டு நீர்திரண்டுவிழும் நாறும் தேகத்தில்வெதுப்புக்காணும் நாவில்ருசியும் நாசியில்மணமும்கெடும் சிரசுநீர்நெஞ்சிலிறங்கிக்கட்டும்.

## வாதபீனிசக்குணம்

நாசிவரளும் நீர்வடியும் நீர்பழுத்து சளிபோல்திரண்டு நாற்றமின்றி விழும்

## பித்தபீனிசக்குணம்

நாசிவழி மஞ்சள்நிறமாய்ச்சளிவடியும் புலால்நாறும்

## சிலேத்மபீனிசக்குணம்

நாசிமாறிமாறி அடைத்து முத்துப்போல் நீர்வடிந்துநாறும் திணுக்குப்போற்சளிவிழும் நாசியில்ஊசிபோற்குத்தும் கண்ணிற்பீளைசாடும்

## நீர்ப்பீனிசக்குணம்

விஷபித்தமும் வெட்டையும் அதிகரித்துச் சிரசிலேறி நாசிவழி நீர்வடிந்துகொண்டிருக்கும் பனிவாடை மழையிற்றோய்ந்தால் நீர்மிகுந்து பிடரியும் முகமும் பரபரத்துஊறும் நாசியரிக்கும் அடிக்கடி தும்மல்விழும் தலைகனத்துவலிக்கும்

## இரத்தபீனிசக்குணம்

வெட்டையின்பேரிற் பித்தமிஞ்சி கபாலத்திலேறி அதில்வட்டமாய்ப் புண்ணாகி நாசிவழிஇரத்தம்விழும் தலைவலிக்கும்

## சீப்பீனிசக்குணம்

வெட்டையும் பித்தமும் கபாலத்தில் அதிகரித்து கபாலமுதல் நாசிவரை புண்ணாகிச்சீய்வடியும் தலைவலிக்கும்

## சிறுய்ப்பீனிசக்குணம்

நாசிவழி சிறுய்போலும் ஈருள்ளிக்கூடுபோலும் சீய்திரண்